ধ্বনি ও রব

VI. No 43 25 Oct. 192

৩

SL ✓
000211N28KM
N 26.1.48
189026

Reg. No. M. 2324. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்
வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா
இந்தியா, பர்மா, ஸிலோன் ரூ. 7 8 0
புற நாடு ... ... ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 1.] 1928வு அக்டோபர்மீ 25உ [No. 43.

20 NOV 1928 MADRAS

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	தலையங்கம் (Leader).	841
2.	சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும். T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A., B. L.	844
3.	கம்பராமாயணம். T. N. சேஷாசலம் B. A., B L.	846
4	தமிழ்ப் பாடம்.	849
5.	அகப்பொருள் வரலாறு K. இராமரத்நம் ஐயர் B.A.	851
6.	வானசாஸ்திரம்	854
7.	காந்திமதி (A Novel). T. N. சேஷாசலம் B. A., B. L.	855
8.	வர்த்தமானம்.	859

189026

கலா நிலயம்.

அரசியலும் அரவிந்தரும்.

IV

பொதுஜனங்களின் தன்மையைச் செவ்விதின் உணராததால் அவர்களை, அச்சமும் ஆசையுமின்றியே, அன்போடும் பொறுமையோடும் நலம் பெற்றி தெரியின்கண் உய்ப்பதற்கு மாறாக, ஆராய்ந்துப் புகழவேண்டிய அவசியத்தின் நிமித்தம், பெரிய மனதுடைய பலர் தம்கருத்தும் வழியும் வழுவிக் கழியலாகின்றனர் என்பதை இதுகாறும் விளக்கினோம். அவைகளுக்கிடையே இப்பொது ஜனங்களின் தன்மைகள் எவையெனச் சிறிது குறிக்கப்பட்டுள்ளன. 'பொதுஜனங்கள்' என்று இந்நாள் பலர் வழங்கி வருவதற் கிணங்கி நாமும் இங்குக் கூறுகின்றோமாயினும் உண்மையில் பொதுஜனங்கள் என்றவோர் வகுப்பு எங்கு மில்லை. பாமரர்களா யிருக்கின்ற ஜனத்தொகுதியைப் பொதுஜனங்க ளென்னலாம் என்பர் சிலர். மற்று, இவர்களைப் பாமரர் என்று அழைக்கின்ற எத்தனையோ பேரைக்காட்டிலும் அறிவிலும் ஒழுக்கத்திலும் மிக்கவர் அச்சனங்களுள் பலர் இருக்கின்றனர் என்பது புதியதோர் செய்தியல்ல. ஆதலின், நாம் பொதுஜனங்கள் என்ற பேரிட்டுப் பகர்வது பெரும்பான்மை மாந்தர் யாவருக்குமே ஒக்கும். தம்மோடு நெருங்கிச் சம்பந்தப்பட்டுள்ள கருமங்களை மதிப்பதிலும் நடத்துவதிலும் ஜனங்கள் பகுத்தறிவு குன்றாமல் விவகரிக்கின்றனர். சுயதர்மம் அதர்மம், சுயநன்மை தீமை, தன்னுடைய உற்றார் பற்றார், தனக்கு இலாபம் நஷ்டம், முதலியன தத்தமக்கு ஏற்றவாறு தேர்ந்துகொள்ளும் திறமை கற்றார் கல்லாதவர் இரு வகுப்பினருக்கும் இயற்கையா யிருக்கின்றது. இவைகளைக் [illegible]ளும் பான்மையில் சிறிது ஏற்றந்தாழ்வு இரு[illegible]னும் இருக்கலாம்; அவைகளைப் பற்றிய உணர்ச்சியிலோ ஒருவருக்கொருவர் பெரிதுங் குறைவுபடார். தம் சுயகருமத்தில் இவ்வகைப் பகுத்தறிவு காட்டுகின்ற ஜனங்கள், தம்மைத் தனித்தனி நேராகச் சாராத பொதுவிஷயங்களில் விவகரிக்கின்ற காலத்தில் நுணுகி ஆராயும் மனமிலராய்ப் பகுத்தறிவைக் கைவிட்டு அவ்வப்போது தோன்றியபடி யெல்லாம் துழாவிச் செல்கின்றனர். ஆதலின், பொதுஜனங்கள் என்ற வொரு வகுப்புப் பெயர் பொருந்தாதாயினும், ஜனங்கள் பொது விஷயங்களில் விவகரிக்கின்ற 'அவசரத்தில்' மாத்திரம் அவர்களைப் 'பொதுஜனங்கள்' என்று குறிப்பது ஏற்றதாகும்.

எனின், யாவராயிருப்பினும் பொதுஜனமென்ற இலக்கணத்திற்குள் அடங்கிய மாந்தருக் குரியதா யிருக்கின்ற செய்திகளை மாத்திரம் சார்ந்து நினைக்குங் காலையிற்றான் நாமிங்குரைத்ததும் நன்குவிளங்கும், இனி உரைப்பனவும் பொருந்தும்.

அவ்வாறு உரைத்தவைகளில், தம்முடைய ஆதரவைத் தேடி வருகின்றவர் எத்தகையவர்களானாலும் பொதுஜனங்கள், அவர்களனைவரையும் ஒரே

படியாய்த்தான் மதிப்பது இயற்கை என்றதும் ஒன்று. கூவுவாரோடு கூவும்போதும் அவர்களுடைய குரலே யன்றி மனம் ஒன்றுவதில்லை. சாத்தனோடு சேர்ந்து கொற்றனை வைவார்; மற்றும் அக்கொற்றனோடே கூடிச் சாத்தனையும் அவர்களே வையலாம். சாத்தனும் கொற்றனும் அவர்களது அனுபவத்தின்படி ஒருவரே. சாத்தன் எந்த எந்த வழியில் தம் தயவைத் தேடினானோ அதே வழியிற்றான் கொற்றனும் தேடுகின்றான். பெற்றபின் சாத்தன் செய்ததையே யன்றிக் கொற்றன் வேறொன்றும் செய்யப்போவது மில்லை. ஆயின் சாத்தனை அளக்கவெனின் இவர்களுக்குக் கொற்றனே அளவுகோல். மீண்டு மக்கொற்றனே சாத்தனுக்கும் அளவுகோல்.

பொதுஜனத் தன்மையில் முதன்மையாயும், மற்றவைகளுக்கெல்லாம் ஆணிவேரா யமைவதாயுமிருக்கின்ற இது, இந்நாட்டிற்கே இக்காலத்திற்கே உரியதோர் செய்தி என்று எண்ணலாகாது. எக்காலத்திற்கும் எத்தேசத்திற்கும் பொருத்தமாய நிரந்தர வாய்மைகளில் இது வொன்று. இவ்வுண்மையை, மாறுட இயற்கையை மயக்கறக் கண்டதோர் அலகிலாக் காட்சியரும், காலதேச எல்லைகளால் கட்டுப்படாத பெரும் புலவர்களுள் ஒருவரும் ஆகிய ஷேக்ஸ்பியர், 'ஜூலியஸ் ஸீஸர்' என்னும் நாடகத்தில் எடுத்துக் காட்டிய திறத்தினை நினைக்குந்தோறும் தெய்வமோ இவரென நம் கைகள் தலைமேல் தாமே குவிகின்றன. ஆங்கிலம் கற்றிலாதாரும், கற்றிருந்தும் இந்நாடகத்தை ஊன்றிப் படித்திராதாரும் உணருமாறு ஈண்டு அதனைச் சிறிது விரிவாக வரைவது நலமென நினைக்கின்றோம்:—

இரண்டாயிரம் வருடங்களுக்குமுன் ரோமாபுரியில் இருந்த 'ஜூலியஸ் ஸீஸர்' என்னும் வீரனது சரிதத்தை முந்நூறு வருடங்களுக்குமுன் ஷேக்ஸ்பியர் மகாகவி ஆங்கிலத்தில் நாடகமொன்றாக எழுதிவைத்தார். குடியரசு கொண்டாடிய ரோமராஜ்யம் உட்பகை வெளிப்பகை இரண்டினாலும் அலைக்கப்பட்டு நிலைதளர்ந் துழன்ற போது, ஜூலியஸ் ஸீஸர் என்னுமோர் போர்த்தலைவனுக்குச் சர்வ அதிகாரமும் கொடுத்து, "வீர, நீ இட்டது சட்டம். எவ்வாற்றானும் எம்மையும் நமது நாட்டையும் காக்க வேண்டும்" என்று சனத்தலைவர் வேண்டிக் கொண்டனர். ஜூலியஸ் ஸீஸர் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு பகைவரை யெல்லாம் அடக்கிப் பொருத இடந்தோறும் வெற்றியே பெற்று எட்டுத் திசையையும் வென்று ரோமாபுரிக்குத் தந்தான். இதனால் அவன் பேரும் புகழும் தன் நாட்டுச் சனங்களால் போற்றப் பெற்று யாவரும் அவனைத் தெய்வமாக ஆராதித்தனர். நாடெலாம் அவன் வாயே பார்த்திருந்தது.

தன்னுடைய ஆற்றலால் ஸீஸர் ஈட்டிய இப்பதவியைக் கண்டு காவியஸ் காஸ்கா வின்னா என்ற சிலர் பொறாமையுற்றனர். இவர்கள் எல்லாரும் அந்நகரிலே பெரியமனிதர் எனக் கருதப் பெற்றவர். அவர்கள் ஸீஸரைச் சனங்கள் கொண்டாடுவதைக் காணக் காண வயிறெரிந்து ஸீஸரை அழித்து விடுவதெனத் துணிந்தனர். இந்தக்காரியம் தம்முடைய பொறாமையாலும் தூர்க்குணத்தாலும் தோன்றியதாயினும், பொதுஜன நன்மையைக் கருதி செய்யப்பட்ட தென்னும் ஒரு பேர் அதற்கு வைத்தாலன்றி ஸீஸரைக் கொன்றவர்களைச் ஜனங்கள் சும்மா விடமாட்டார் என்பது அவர்களுக்குத் தெரியும். ஆதலால் ரோமாபுரியில், புத்திமான் நீதிமான் குணவான் என்று எல்லோராலும் நன்கு மதிக்கப்பெற்ற புரூடஸ் என்னும் ஒருவனை இவர் செய்யும் சதியாலோசனைக் கட்சிக்குத் தலைவனாக்கிக் கொண்டனர். ஸீஸரோ அவனைத் தன் உயிரிற்கு உயிராய நண்பனாய்க் கருதி யிருந்தான். புரூடஸும் ஸீஸரிடத்தில் வைத்திருந்த நட்புப் பெரிதென்றே கருதவேண்டும். "ஸீஸரினுடைய அதிகாரம் எல்லை வரம்பற்றுப் போகின்றதென்றும், அவன் பேராசைப் பெரும்பேய் பிடித்து ஆடுகின்றானென்றும், இந்த வழி இவனை விட்டால் குடியரசு உரிமையாவும் ஜனங்களிடத்தினின்று கவர்ந்துகொண்டு கொடுங்கோல் மன்னனாகி யந்நாட்டைத் தான் அடிமைகொண்டு விடுவானென்றும், தான் பெற்ற வெற்றியாலும் புகழாலும் வெறிபிடித்துச் செருக்கினால் தன் விரல்முனையில் உலகத்தைச் சுழற்றி வைக்கப் பார்க்கின்ற இவனைக் கொன்று போக்கினாலன்றி உரோமாபுரிக்கும் பொதுஜனங்களின் பிறப்புரிமைக்கும் பொல்லாங்கு நேருமென்றும்" பல வாறாகப் புரூடஸிற்குப் போதித்துத் தூண்டவே அவனும் ஸீஸரைச் சதிக்கொலை செய்ய உடன்பட்டனன். ஜூலியஸ் ஸீஸரோடு உறவாடி அருகிருந்து இவர் வஞ்சனையால் அவனைப் படுகொலை புரிந்துவிட்டனர். புரூடஸ், ஸீஸரைக் கொன்றது பொதுஜன நன்மையைக் கருதியோ அல்லது சுயநயந் தூண்டியேயோ, யாவதா யிருப்பினும் அந்த ஸீஸரின் பதவிக்கு இனித் தானே உரியவன் என்று எண்ணலாயினான். ஆதலின் ஸீஸரிடத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்த அச்சனங்கள் அவனையே கொன்ற தன்னை ஆதரிக்கும்படி செய்துகொள்ள வேண்டியது இவனுக்கு அவசியமாயிற்று.

ஸீஸர் கொலையுண்டான் என்பதைக் கேள்வியுற்ற அந்நகரமாக்கள் ஆரவாரத்துடன் எழுந்து, "யார் இது செய்தது, ஏன் இது செய்தது" என்று முழங்கலாயினர். ஏற்றதோர் காரணங் காட்டாவிடின் ஸீஸரைப் பெரிதும் பாராட்டி யிருந்த இச்சனங்களெல்லாம் கூடி அவனைக் கொன்ற பழியைத் தாமே தீர்த்திருப்பார். ஆதலின், புரூடஸும் காவியஸும், ஸீஸரது இரத்தம் தம் கைக் கத்தியில் உலரா முன்னம், முழங்கிக் குழம்பும் ஜனங்களுக்குத் தாம் செய்த கொலையின் செம்மையை விளக்கிக் காட்ட அந்நகரப் பொதுமன்றத்திற்கு வந்து எய்தினர். எய்திய இவர்களை உரோமாபுரி வாசிகள், "தக்க காரணம் எங்களுக்கு நீங்கள் சொல்லித்தான் தீரவேண்டும். எங்களுக்கு என்ன சமாதானம் சொல்லப் போகின்றீர்" என்று குழுமித் தொடர்ந்தனர். இனி, ஷேக்ஸ்பியரே சொல்லட்டும்:—

புரூடஸ்:—ஆயின், வாருங்கள். வந்து யான் சொல்வதற்குச் செவி கொடுங்கள்—நண்பர்காள்—காவியஸ், நீ இந்தக் கூட்டத்தைப் பிரித்து அடுத்த தெருவிற்கு அழைத்துக் கொண்டு போ. (இது புரூடஸ் காவியவிற்கு இகாசியமாய்ச்சொன்னது)—நண்பர்காள், நான் பேசுவதைக் கேட்க விரும்புவோர், இங்கேயே இருக்கட்டும்; காவியஸோடு போக விரும்புவோர் அவரோடு செல்லுங்கள். ஸீஸரினுடைய மரணத்திற்குப் பொதுஜனச் சார்பான காரணங்கள் வெளிப்படையாக வழங்கப்படும்.

ஜனங்களில் ஒருவன்:—நான் புரூடஸ் பேசக் கேட்பேன்.

மற்றொருவன்:—நான் காவியஸைக் கேட்கிறேன். பிறகு, இவர் வேறு வேறாக வழங்கிய காரணங்களை நாமிருவரும் ஒப்பு நோக்குவோம்.

[ஜனங்களின் ஒரு பகுதி தொடரக் காவியஸ் அகல்கின்றான்.]

வேறொருவன்:—புரூடஸ் பெருமகன், மேடையேறிவிட்டான். சப்தமின்றிச் சும்மா இருங்கள்.

புரூடஸ்:—முடிவுவரையில் பொறுமையா யிருங்கள்: உரோமாபுரி வாசிகாள், சுயதேசிகாள், அன்பர்காள்! என்னுடைய கட்சியைக் கேட்பதற்குச் செவிகொடுத்து, அதனை நீங்கள் கேட்கும் வண்ணம் சப்தம் செய்யாதிருங்கள். என்னுடைய கண்ணியத்தை முன்னிட்டு என்னை நம்புங்கள்; அப்படி நம்பும்பொருட்டு என்னுடைய கண்ணியத்தை நன்கு மதித்திடுங்கள். உங்கள் பேரறிவால் என்னைக் கண்டியுங்கள். விஷயங்களை ஆராய்ந்து சீர்தூக்கும்பொருட்டு உங்கள் புலன்கள் அயராமல் விழித்துக்கொள்ளுங்கள். இந்தக் கூட்டத்தில் யாராகிலும் ஸீஸர்தன் அன்புடைய நண்பர் இருப்பாராகில், ஸீஸரினிடத்தில் புரூடஸிற்கு இருந்த அன்பு அவரிற் குறைந்ததன்றென்று அவருக்குக் கூறுகின்றேன். ஆயின் ஸீஸரிற்கு விரோதமாய்ப் புரூடஸ் ஏன் கிளம்பவேண்டும் என்று அந்த நண்பர் கேட்பாராயின், இதுவே என் உத்தரம்—ஸீஸரைக் குறைந்து நான் காதலித்தேன் அல்லேன், ரோமாபுரியையே அதிகமாகக் காதலித்தேன். ஸீஸர் இறக்க யாவரும் விடுதலை யடைந்தவர்களாய் வாழ்வதைப் பார்க்கிலும் ஸீஸர் உயிரோடிருந்து எல்லாரும் அடிமைகளாய் மரிக்கவேண்டுகின்றீர்களோ? ஸீஸர் என்பால் அன்புவைத்திருந்ததால் நான் அவனுக்காக அழுகின்றேன்; அவன் அதிர்ஷ்டசாலியாய் இருந்ததால் நான் அதற்கு அகமகிழ்கின்றேன்; அவன் பராக்கிரமசாலியா யிருந்ததால் அவன் பெருமையைப் பாராட்டுகின்றேன்: ஆனால், அவன் பேராசையுடையவனா யிருந்ததால், அவனைக் கொன்றேன். அவனுடைய அன்பிற்குக் கண்ணீரும், அதிர்ஷ்டத்திற்கு அகமகிழ்ச்சியும், பராக்கிரமத்திற்குப் பெருமையும், பேராசைக்கு மரணமும் வழங்கலாயின. கட்டுண்ட அடிமையாய்க்கிடக்கின்ற ஆசையுடைய மூதா அற்பன் இங்கு யாவனேனும் இருக்கின்றானோ? இருந்தால் சொல்க, அவனுக்கே நான் அபராதம் இழைத்தவனாவேன். உரோமாபுரிவாசிக் குரிய நிலையை வகிக்க விரும்பாத அநாகரிகன் இங்கு யார் இருக்கக்கூடும்! இருந்தாற் சொல்க, அவனுக்கே நான் அபராதம் இழைத்தவனாவேன். தன்னுடைய தேசத்தில் ஆசையில்லாத நீசன் இங்கு யார் இருக்கக்கூடும்? இருந்தால் சொல்க; அவனுக்கே நான் அபராதம் இழைத்தவனாவேன்.....உங்கள் உத்தரத்திற்குக் காத்திருக்கின்றேன்.

ஜனங்கள்:—ஒருவரும் இல்லை, புரூடஸ், ஒருவரும் இல்லை.

புரூடஸ்:—ஆயின், ஒருவருக்கும் யான் எக்குற்றமும் புரிந்தவனல்லேன். நீங்கள் புரூடஸ் திறத்திலே செய்வதற்கு ஏற்றதைவிட அதிகமாய் நான் ஸீஸருக்குப் புரிந்தவனுமாகேன்.....மார்க் ஆண்டனி அருகிருந்து துயர்கூற ஸீஸரின் உடலை இதோ கொண்டுவருகின்றனர்.....கொல்வதற்கு ஆண்டனி ஒரு கை கொடுத்திலனாயினும், ஸீஸரின் சாவினால் வரும் நன்மையை இவனும் பெறுவான்; நம்முடைய குடியரசு அதிகாரத்தில் அவனுக்கும் ஓர் இடம் உளது: பார்க்கப் போனால் உங்களிலே யாருக்குத்தான் இல்லை? இனி, யான் நும்பால் விடைபெற்றுப் போகின்றேன். போகுமுன் நான் முடிவாகக் கூறுவது இது—ரோமாபுரியின் நன்மைக்காக எனது சிறந்த நண்பனை வதைத்தேன்—இனி என்னுடைய மரணமும் அவசியமென்று என் தேசம் சித்தம்கொள்கின்ற சமயத்தில் அக்கத்தியே எனக்கு மிருக்கின்றது.

ஜனங்கள்:—வாழ்க, புரூடஸ், வாழ்க வாழ்க.

நகரவாசிகளுள் ஒருவன்:—வெற்றியோடு நாம் அவனை அவன் மனைக்கு அழைத்தேகுவோம்.

மற்றொருவன்:—இவன் முன்னோர்களோடு இவனுக்குமோர் சிலையுருவம் செய்தளிப்போம்.

வேறொருவன்:—இவன்தான் இனி ஸீஸரா யிருக்கட்டும்.

நாமிங்கு மொழிபெயர்த்துத் தந்த இவ் வாக்கியங்களின் பொருளைத் தேர்ந்து ஆராயுங்காலையில் புரூடஸின் குரலின் எதிரொலியே இக்கால இராஜ்யதந்திரவாத மேடைகளினின்று கேட்கலாகின்றது. கடுகைத் துளைத்து ஏழ்கடலையும் புகட்டி வைத்திருக்கின்றார் ஷேக்ஸ்பியர். ஜனங்களின் குடி கெடுகின்றதென்று காரணமின்றியேயும் அச்சுறுத்துவதும், அக் கெடுதியை நீக்கவென்று படுகொலையல்லாவிடத்து அதற்கு நிகரான கருமங்களைச் செய்வதும், செய்தவர் அச் சனங்களுக்குத் தாழ்மைபூண்டு சரண்புகுவதும், உள் நுழைந்து பார்த்தால் பொறாமை அறியாமை பேரவா முதலியவைகளே இத்தனைக்கும் வித்தாயிருப்பதைத் தம் நாவன்மையால் மறைக்க முயல்வதும், இவையனைய பிறவும் புரூடஸின் சொற்பொழிவில் அடங்கியிருப்பதை விரிவுரைகளால் விளக்க வேண்டா.

"ஸீஸரோ, ஜனங்களே, பேராசையின் வயப்பட்டு உங்கள் உரிமையெல்லாம் அழித்து உங்களைத் தன் அடிமையாக்கவேண்டுமென்ற பாதகப் பகைவனாயினான்; அவன் எனது ஆருயிர் நண்பனாயினும் உங்கள்பொருட்டு இக் கொலை செய்தேன். நானே உங்களுக்குற்ற நண்பன்.....ஆதலால் என்னை நீங்களெல்லாரும் பாராட்டவேண்டும்" என்பானேனும், ஜனங்கள் தம் சம்மதத்தைத் தெரிவிக்க, "இவன்தான் ஸீஸராயிருக்கட்டும்" என்று சாத்தனைக் கொன்ற கொற்றனுக்கும் சாத்தனென்ற பேரை வழங்குவதன்றி வேறு யாது கற்றுளார். தம் மனத்தைத் தாமே உணர இயலாத இவ்வகை மக்களின் ஆதரவை நாடிச் சேகரித்தாலன்றி அவர்களுக்கு நலம்சில செய்ய இயலாதென விவகரிப்பவர் எப்பயன் பெறவேனும் நல்கவேனும் வல்லவராதல் கூடும்.

சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

பொருள் ஆராய்ச்சி.

[825-ம் பக்கத் தொடர்ச்சி]

பலரும் பல்வகை யாதல்.

நாணன் செய்யவேண்டிய வேலை முடிந்தது. திருமலைக்கு வழி காட்டினான். வழிபடு முறையினையும் தெரிவித்தான். இனி அவன் செய்யவேண்டுவதொன்றும் இல்லை. ஆகவே அவனையும் மறந்தார் திண்ணனார். 'இறைவன் இன்னும் பசியாக இருக்கின்றாரே' என்று இரங்கினார். பன்றியின் தசை நினைவிற்கு வந்தது. அதை எடுத்துவரப் புறப்பட்டார். முன்வழி காட்டவேண்டியிருந்ததாலே "நாணனும் அன்பும் முன்பு நளிர்வரை யேறத்" தாம் பின்னே சென்றார். இப்போதோ "நாணன் பின்பு வந்தனைய" முன்னே சென்றார்.

காடன் எதிரேபோய்க் காலில் விழுந்தான். 'தீக் கடைந்து வைத்துள்ளேன். நீங்கள் வைத்தது வைத்தபடியே பன்றியும் இருக்கிறது. நான் ஒன்றும் தின்னவில்லை; திருடவும் இல்லை. அந்தப்பக்கமும் இந்தப் பக்கமும் வேண்டுமானால் தேடிப் பார்த்துக் கொள்ளுங்கள். ஏதாவது உறுப்புக் குறைபடுகின்றதா பாருங்கள்" என்று இயற்கையில் திருடர்களான வேடர்கள் போலவே பேசினான். "திரும்பிப் போகவேண்டுமே. இவ்வளவு நேரம் ஏன் ஆயிற்று?" என்று கேட்டான். எல்லாவற்றையும் கண்கூடாகக் கண்ட நாணனுக்குத் திண்ணனாது நிலை எவ்வாறு தோன்றிய தென்பதை இங்கெடுத்துச் சொல்கின்றார் சேக்கிழார். வேடர்கள் அறிந்ததொரு உவமையையே நாணன் கூறினான். உடும்பானது ஒரு மாப்பொந்தினைக் கவ்விக்கொண்டால், அதனை என்ன பிடித்து வலித்தாலும் சிறிதும் விடாது பற்றிக் கொண்டிருப்பதுபோலத் திண்ணனாரும் குடுமித் தேவரைக் கண்டதும் விடாமல் பற்றிக்கொண்டார் என்றான். திண்ணனாரைத் தெய்வம் பிடித்துக்கொண்ட தென்று தன்னறிவிற் கெட்டியவாறு விளக்கினான். கேட்டதும் காடன் கலங்கிவிட்டான். "என்ன உனக்குப் பித்தா? திண்ணா நீ எங்கள் அரசனல்லவா" என நினைப்பூட்டினான். இவன் சொல்லியதொன்றும் அவர் காதில் விழவில்லை. முகத்தைத் திரும்பிப் பார்த்தவரும் அல்லர். காடனும் நாணனும் தம்முள் கலந்து பேசிக்கொண்டார்கள். முன் காளத்திமலையில் நடந்ததை நாணன் சொன்னான். இங்கு நிகழும் செய்தியை இருவரும் பேசுகின்ற வாயிலாகச் சேக்கிழார் நமக்குத் தெரிவிக்கின்றார். கதையைப் பாவலர்களே தமது மொழியால் சொல்லிக் கொண்டு போவதைவிட அக்கதையில் வருவோர் தமக்குள் பேசிக்கொள்ளும் பேச்சின்வழியாக அறிவிப்பது மிக அழகாகும். கூத்துநூல்கள் இதனால்தான் சிறந்தன எனப்படுகின்றன. கதை கண்ணெதிரே நடப்பது போலத் தோன்றுகிறது. நிற்க, நாணனும் காடனும் ஒன்றுசேர்ந்து இவ்வழிபாட்டினைப் பற்றி என்னஎன்ன எண்ணினார்கள் என்பதை இங்கு விளக்குகின்றார் சேக்கிழார்.

மருங்குநின் றவர்கள் பின்னும்
மயல்மிக முதிர்ந்தான் என்னே
அரும்பெற லிறைச்சி காய்ச்சி
அதுக்கிவே றுமிழா நின்றான்
பெரும்பசி யுடைய னேனும்
பேச்சில னெமக்குப் பேறு
தரும்பரி சுணரான் மற்றைத்
தசைபுறத் தெறியா நின்றான்.

தேவுமால் கொண்டான் இந்தத்
திண்ணன்மற் றிதனைத் தீர்க்க
லாவதொன் றறியோம் தேவ
ராட்டியை நாக னோடும்
மேவிநாங் கொணர்ந்து தீர்க்க
வேண்டுமவ் வேட்டைக் கானில்
ஏவலாட் களையுங் கொண்டு
போதுமென் றெண்ணிப் போனார்.

"தேவுமால் கொண்டான் தேவராட்டியைக் கொண்டு வருவோம்" என்று போயினர். பின் கொண்டுவந்தனர். ஒன்று முடியாமற்போகவே கைவிட்டுவிட்டார்கள்.

உலகிலே ஒருவர்பேசுவதுபோல மற்றொருவர் பேசுவதில்லை என்று முன்னரே குறிப்பிட்டோம். அவ்வுண்மையைக் காடன் நாணன் என்ற இருவரது பேச்சிலேயே காணலாம். நாணன் தனது பெயருக்கேற்ப நாணம் மானம் அறிவு முதலிய உயிர்க் குணங்கள் உடையவனாயும் உயரிய மனத்தவனாயும் அகன்ற அறிவு வாய்ந்தவனாயும் விளங்கினான். திண்ணனாருக்கே ஒரு வகையில் குரு ஆனவன். வேடர்கள் அறியவேண்டுவன எல்லாம் அறிந்தவன், அதற்கு மேலும் பல அறிந்து வைத்திருந்தான். வழிகள் எல்லாம் அவனுக்குக் கண்மூடின பாட்டை. நடுக் காட்டிலிருந்து தண்ணீர் எங்கே என்றால் இருக்கும் இடம் காட்டுவான். அங்கு நம்மைக் கொண்டும் செல்வான் மலை தோன்றுகிறதே என்றால் ஆம் அதில் குடுமித் தேவர் உள்ளார் என்பான். தோப்பும் சோலையும் அருவியும் ஆறும் மலையும் சாரலுமாய் இருக்கின்ற இயற்கைக் காட்சியைப் பசியை மறந்துங் கண்டு இன்புறுவான். "நல்லகாட்சியேகாணும்" என்று அதைப்பற்றி அகமகிழ்ந்து கூறுவான். பச்சிலையும் நீரும் ஏதென்றால் முன் தான் கண்டதை நினைப்பூட்டிக்கொண்டு பார்ப்பனன் செய்த தென்பான்; கண்ணப்பர் கடவுளை உடும்பு பிடியாகப் பிடித்துக்கொண்டார் என நாயனாது நிலையைப் பொருத்தமானதொரு உவமைகொண்டு தெளிவாக விளக்குவான். இவன் ஒரு பெரும் பேச்சாளி. திண்ணனார் பன்றியைக் கொன்றபோதும், "காடனே ஈதென்ன வியப்பு" என்று இவன்தான் புகழ்ந்து பாராட்டுவான். திண்ணனார் கேட்ட கேள்விக்கும் கேளாத கேள்விக்கும் இவன்தான் விடை பகர்வான். இவன் தெரியா தென்று ஒன்றையும் விடுவதில்லை. தேவதுந்துபி முழங்குவது கேட்டால் அதையும் உற்றுக் கேட்டு எண்ணிப் பார்த்து "தேனீக்களின் முழக்கம்போலும்" என்பான்.

கதிரவன் உச்சி நண்ணக்
கடவுண்மால் வரையி னுச்சி
அதிர்தரு மோசை ஐந்தும்
ஆர்கலி முழக்கம் காட்ட
இதுஎன்கொல் நாணா என்றார்க்
கிம்மலைப் பெருந்தேன் சூழ்ந்து
மதுமலர் ஈக்கண் மொய்த்து
மருங்கெழும் ஒலிகொல் என்றான்.

கண்ணப்பரது பேருறுதியைக் கண்டு அதைத் தடுக்கத் தன்னால் ஒன்றும் ஆகாதெனத் தெரிந்துகொள்கின்றான். அவர் வழிபடுவதைத் தடுக்கின்றானில்லை. பேச்சுக் கொடுத்து அலைக்கழிக்கின்றானில்லை. பின்னாலேயே நின்று அவர்மேல் கண்ணும் கருத்துமாய்ப் பார்த்து வந்து காடனிடம் நிலைமையை விளக்குகின்றான்.

காடனோ தன் பெயர்க்கேற்பக் காட்டான் உடற்குணங்கள் நிரம்பியவன். வேட்டையாடுவதில் நாணனுக்குப் பின்வாங்கியவ னல்லன். ஆனால் கலகல என்று எல்லோருடனும் கலந்து கூடிக் குலாவுபவன் அல்லன். சிறு பேச்சாளி. செருகி வைத்த அகப்பை அல்லன். எதற்கும் யான் முந்தி என வருபவனல்லன். திண்ணனார் பன்றியைக் கொன்றதைக் கண்டு மனதில் பெரியதோர் வியப்படைந்தான்; திண்ணனார் காலிலே விழுந்தெழுந்தான். ஆனால் அவ்வியப்பை வெளியே பேசிப் புகழ்ந்தவனல்லன். தனக்குள்ளேயே அடக்கி இருப்பவன். பிறர் பேச்சுக்குப் போகாதவன். நாணனைப்போல உலக அறிவு வாய்ந்தவனல்லன். திண்ணனார் பொருள்களைப் பற்றி அறிந்துகொள்ளவேண்டிப் பேசும்போதெல்லாம் நாணனோடுதான் பேசுகின்றார். "நாணனே தோன்றும் குன்றில் நண்ணுவோம்" என்று நாணனிடந்தான் தெரிவிக்கின்றார். மேலே மலையேறிச் செல்வதற்கும் வழித்துணையாகவும் வழிகாட்டியாகவும் நாணனைத்தான் உடன்கொண்டு செல்கின்றார். பின் காடனுக்கு என்ன வேலை கட்டை வெட்டுவது; கடைந்து கனல்மூட்டுவது; காவல் காப்பது, இவ்வளவே. அவன் பேசுவதும் காட்டாள் பேசுவது போலத்தான் இருக்கின்றது. "நான் ஒன்றும் திருடவில்லை. நீங்கள் வேண்டுமானால் பார்த்துக் கொள்ளுங்கள்" என்கிறான். எங்கே தன்மேல் ஐயங் கொள்கின்றார்களோ என்று அஞ்சுபவன். அவன் பேச்சு நாணனதுபோல அவ்வளவு தெளிவானதல்ல. தட்டுந் தடுமாறியும் பேசுகின்றான். உவமை கூறுவது ஒருபுறம் இருக்கட்டும். ஒரு கருத்தை எடுத்து விளக்கி விரித்துரைக்க அவனால் முடியாது.

காடனு மெதிரே சென்று
தொழுதுதீக் கடைந்து வைத்தேன்
கோடுடை ஏன முங்கள்
குறிப்படி யுறுப்பை எல்லாம்
மாடுற நோக்கிக் கொள்ளும்
மறித்து நாம்போ கைக்கின்று
நீடநீர் தாழ்த்த தென்னோ
என்றலும் நின்ற நாணன்

என்ற பாட்டு ஆற்றொழுக்காகப் போகவில்லை. எத்துணை கருத்துக்கள் புற்றீசல் போலப் புறப்படுகின்றன. நாணன் பேசியதாக வரும் செய்யுள்கள் இழுமென அருவிபோலப் போவதனையும் விளக்கமாய்த் தெளிவாய் இருப்பதனையும் காண்க.

அங்கிவன் மலையில் தேவர்
தம்மைக்கண் டணைத்துக் கொண்டு
வங்கினைப் பற்றிப் போகா
வல்லுடும் பென்ன நீங்கான்
இங்குமத் தேவர் தின்ன
இறைச்சிகொண் டேகப் போந்தான்
நங்குலத் தலைமை விட்டான்
நலப்பட்டான் தேவர்க் கென்றான்

என்ற செய்யுளைப் பார்க்க. என்ன அழகாகத் தான் கொண்ட கருத்தை விளக்குகின்றான் நாணன். கண்ணப்பரது அந்த மாறிய நிலையைக் கண்டு காடன் என்ன சொல்கிறான்.

என்செய்தாய் திண்ணா நீதான்
என்னமால் கொண்டாய் எங்கள்
முன்பெரு முதலி அல்லை
யோஎன முகத்தை நோக்கார்

என்பதைக் காண்க. முன்னமே காடன் ஒரு மூங்கை அதிலும் அவரதுநிலைமையைப் பார்த்ததும் தலையில் இடி விழுந்தாற்போல ஏங்கி நிற்கின்றான். 'என் செய்தாய் திண்ணா எங்கள் முதலி அல்லவா" என்று இரண்டொரு சொல்லே அவனால் பேச முடியும். இவ்வளவு வேற்றுமைப்பட இவ்விருவரையும் புனைந்துரைத்த சேக்கிழாரைத் தெய்வப்புலவர் என்பதில் என்ன ஐயப்பாடு?

மற்றையவர்கள் பேசும் பேச்சினையும் வேறுபிரித்தறிதல் கூடும். நாகனோ கிழவன் பேசுவதுபோலத் தளர்வோடும் நீட்டிநீட்டிப் பேசுகின்றான். தேவராட்டியோ மிடுக்காகப் பேசுகின்றாள். சிவகோசரியார் அறிவு நிறைந்த பேச்சுப் பேசுகின்றார். கண்ணப்பர் அன்பு ஒழுகும் பேச்சுப் பேசுகின்றார். சிவபெருமான் இழுமெனும் இன்னோசையுடனே இனிய பாடல்களால் அறிவும் அன்பும் ததும்பப் பேசுகின்றார். அப்பாடல்கள் உயர்ந்த பாட்டுக்கள்; பாவின் நயமெலாம் நிரம்பியவை. இனி நடையோடு பாட்டின் போக்கும் அவரவர் பேச்சுக்கு ஏற்றவாறு மாறிமாறி வருகின்றது. நாகனோ இரக்கத்தைப் பெருக்கும் அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தத்தில் பேசுகின்றான். தயரதன் தனது முதுமையில் இராமனைப் பிரிந்து புலம்புவதை இந்த விருத்தத்தில்தான் குலசேகராழ்வார் பாடுகின்றார். முன் நடந்ததைச் சொல்லும் கடவுட்பொறையாட்டியும் ஒரு மூதாட்டி தானே. ஆகவே அந்த இடத்தில் அவளும் அந்த விருத்தத்தில்தான் பேசுகின்றாள். தெய்வந் தன்மேல் வந்தபோதும், திண்ணனாரிடம் சென்று அவரை வாழ்த்தும்போதும், இக்கிழவியே அச்சுறுத்திப் பலிகேட்கும் தெய்வமாகின்றாள். அதற்கேற்பத் துள்ளலோசையோடு மிடுக்காக ஓடும் கலிவிருத்தத்தில் வாழ்த்துகின்றாள். சிவபெருமானது அருட்கிடையைச் சேக்கிழார் இனிமை மிக்க கொச்சகத்தில் பாடுகின்றார். சிவகோசரியாரும் அந்தப் பாட்டில்தான் பேசுகின்றார். கற்றோர் வட்டம்கட்டிப் பேசுவதற் கேற்றது அப்பாடல். 'சிவபெருமான் முழுமுழுப் பாட்டாகத் திருவாய் மலர்ந்தருள்கின்றார். சிவகோசரியாரது பேச்சோ அரைகுறைப் பாடல் அளவாகவே நின்று விடுகின்றது. இனிமை கெழுமக் கொஞ்சிப் பேசிக் கண்ணப்பர் கடவுளுக்கு ஊட்டுவதை இப்பாவிலேயே பாடுகின்றார் சேக்கிழார். "தேனுமுடன் கலந்ததிது தித்திக்கும்" என வருதல் காண்க. குலசேகராழ்வாரும் இக் கொச்சகப் பாவிலே தாலாட்டுப் பாடுவது காண்க. இனிமையே ஒருருவாகியது இப்பாடல் எனலாம். சிறிய அளவினதாகிய மற்றோர்வகை அறுசீர் விருத்தந்தான் புராணநடையாக வருவது. ஒருவகையில் உரைநடையை ஒத்திருப்பது. மேனி மினுக்கின்றி விளங்குவது. ஆற்றொழுக்காகப் போவது. கதையை நேரே சொல்லிக் கொண்டு போதற்குக் கம்பரே முதலானோர்கள் இதனையே பயன்படுத்திக் கொள்கின்றார்கள். ஆரவாரமற்ற கண்ணப்பரது அன்பு நிறைந்த மொழிகளை இப்பாவிலேயே அமைத்துப் பாடுகின்றார் சேக்கிழார். மற்றைய வேடர்களும் இப்பாவில்தான் பேசுகின்றார்கள். நாணன் பேச்சுக்கும் காடன் பேச்சுக்கும் உள்ள வேற்றுமையை முன்னரே எடுத்துரைத்தோம். அவர்கள் பேச்சுக்கும் கண்ணப்பர் பேச்சுக்கும் உள்ள வேற்றுமையை எடுத்தொருவர் காட்ட வேண்டியதில்லை. அவர் சொல்லும்

சொல் ஒவ்வொன்றிலும் அன்பு சொட்டுகின்றது. இறைவன் தனியே இருக்கின்றார் என்று இரங்குவதையும், கண்ணில் புண்ணீர் வருகின்றதே என்று புலம்புவதையும் இப்பாவால் கூறுகின்றார். ஆனால் அன்போடு ஊட்டுவதனைக் கொச்சகத்தால் பாடுகின்றார்.

பேச்சின் போக்கிற் கேற்பப் பாட்டின்போக்கு மாறுபடுவதோடு கதையின் போக்கிற் கேற்பவும் பாட்டின் போக்கு மாறுபடுகிறது. சிற்றளவினதாகிய அறுசீர் விருத்தம் புராணநடை என்றும், அஃது ஆற்றொழுக்காகப் போவதென்றும், பொதுவாகக் கதையைச் சொல்லி வருவதற்கும் சிறப்பாகக் கண்ணப்பரது அரும்பெருஞ் செயலினை அழகுபட விரித்துரைத்தற்கும் உரியதாயிற்று என்றும் மேலே குறிப்பாகக் காட்டினோம். நாகனது மூப்பினைப் பற்றியதை எல்லாம் கிழவனது அழுகைப் பாட்டாகிய பேரளவினதாகிய அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் கூறுகின்றார். இஃது ஆமை நடைபோன்றதெனலாம். கண்ணப்பர் வேட்டைக்குப் போவதற்கு முன்னர் ஒப்பனை செய்துகொள்வதை மிடுக்காகவுள்ள கலிவிருத்தத்திலே இளங்காளைமாடு நடப்பதுபோல நடக்கும் பாக்களால் பாடுகின்றார். வேட்டையில் குத்துவதையும் வெட்டுவதையும் அளவாக அடியிட்டு ஓடும் குதிரை நடையான சந்த விருத்தத்தில் பாடுகின்றார். அவை வெட்டுண்டு விழுவதையும் துடிதுடிப்பதையும் இழுத்துப் பறிக்கும் சந்தவிருத்தத்தில் பாடுகின்றார். யானை தன்னடியில் அகப்பட்டாரை மெல்ல அளவடியிட்டு மிதித்துத் துவைத்து ஆடி ஆடி நடப்பதுபோலப் போகின்றன அப்பாடல்கள். உயர்ந்தோர் வழக்கையும் பேச்சையும் கொச்சகத்தில் பாடுகின்றார். யாழில் எழுந்த இன்னோசை போலப் போகின்றன அப்பாடல்கள்.

முதல்நாள் வேட்டையினைக்கண்டு கொடுமை என்று நாம் அஞ்சுமாறு பாடுகின்றார். பின்னையவேட்டைகள் கடவுளிடத்து வைத்த அன்பால் நிகழ்ந்தவை யாதலினாலே அந்த இடத்தில் கொலையை மறைத்து அன்பு ஒன்றினையே காட்டிப் புனைந்துரைக்கின்றார். சந்த விருத்தங்களை விட்டு இனிமை பயக்கும் கொச்சகத்தாலேயே பாடுகின்றார். இந்தக் கொச்சகம் மயில் நடப்பது போல ஒய்யாரமாகப் போவது காண்க. அகப்பொருளைப் பற்றியவை கொச்சகத்தில் வருவதைக் கலித்தொகையில் காண்கின்றோம். சேக்கிழாரே சுந்தரரும் சங்கிலியாரும் ஒருவரை ஒருவர்கண்டு ஒரேவகையாக எண்ணுவதை இந்தப் பாவில்தான் பாடுகின்றார். நமது கதையிலும் நள்ளிரவில் கண்ணப்பர் கடவுளைக் கண்டவண்ணமாகத் தம்முணர்வற்றுக் கடவுளொடு ஒன்றாகி உவகைக் கடலில் அழுந்திநின்ற நிலையானது அகப்பொருளில் அழகியதோர் துறையாதலின் அதனையும் இந்தக் கொச்சகத்தில்தான் பாடுகின்றார். கதையின் பொருளிற் கேற்பப் பாட்டின் நடை காளைநடையாகவும் குதிரைநடையாகவும் யானைநடையாகவும் ஆமை நடையாகவும் மயிலின் நடையாகவும் மாறிமாறி வருவது, கதையின் கருத்தினை ஒலியாலேயே விளக்கி வைத்துப் பொருளைச் சிறப்பிக்கின்றது.

T. P. மீனாக்ஷிசுந்தரன்.

கம்ப ராமாயணம்.

பாலகாண்டம்

8. வேள்விப் படலம்.

(832-ம் பக்கத் தொடர்ச்சி.)

அளிப்பதற் கிசையார் தாமே
பாத்திர மாய்ந்து நிற்பார்.

பத்தினிப் பெண்டிர்தம் சித்தம்போல் தூயதாயவச் சோலையில் மற்றவர் பற்றறப் படிப்பதற் குற்றவோர் பேருடைய திருமால், ஊழி ஒரு நூறிருந்து அருந்தவம் இயற்றினனென்று இராம இலக்குமணர்களுக்குக் கூறிய கோசிகன், மாவலி சரிதத்தோடு வாமன அவதாரத்தையும் மேலினி இயம்புவானாயினான் :—

ஆனவ னிங்குறை கின்றவர் நாள்வாய்
ஊனமின் னால மொடுங்கு மெயிற்றாண்
ஏனமெ னுந்திறன் மாவலி யென்பான்
வானமும் வையமும் வௌவுதல் செய்தான்.

[அத்தகைய திருமால் இங்குத் தங்கியிருந்த அந்தக் காலத்தில், குறைவற்ற இவ்வுலகம் அடங்கிய தந்தத்தை உடைய ஆதி வராகத்தைப் போன்ற வல்லமை வாய்ந்த மாவலி என்பவன், வானலோகத்தையும் பூலோகத்தையும் தன்க்கு உடைமையாக்கிக் கொண்டான்.]

மகாபலி வையமெல்லாம் தன் கைக்குள் அடக்கி ஆண்ட திறமையால், உலகத்தைத் தன்னொரு கொம்பிலே தாங்கிய ஆதிவராகத்திற்கு நிகராயினான் என்பான் கோசிகன். வராகாவதாரமெடுத்த திருமாலின் பெருமையும், அவர்பால் ஒடுங்கிய ஊனமில் ஞாலத்தின் சிறுமையும் அடுத்துவைத்து ஒப்புநோக்குதற்கு,

குளப்படி நெய்யடி சிற்கொத்த தோகொள்ளப்
பற்றியதோ
குளப்படி யிற்றிங்கள் சேரரங் காகோல
மாயவன்றான்
குளப்படி காட்டும் பிறைமறுப் போலொரு
கோட்டிருந்து
குளப்ப டியினகத் துட்பறல் போன்ற
குவலயமே

[சந்திரபுஷ்கரணி என்னும் குளத்தின் படியில், தன் மாதுலனாகிய தக்ஷன் இட்ட சாபத்தைத் தீர்த்துக் கொள்ளும்பொருட்டுச் சந்திரன் வந்துசேர்ந்த திருவரங்கத்தில் வாழ்வோனே, நீ வராகாவதாரம் எடுத்த காலத்தில், உன்னுடைய நெற்றிக்கு நிகரெனத் தோன்றும் பிறைச் சந்திரனில் காணும் மறுவைப்போல் உன்னுடைய ஒரு கொம்பில் இருந்ததும், உன்னுடைய அடிக்குளம்பினுள் பருக்கைக்கல்லளவு அடங்கியதுமாகிய இந்தப் பூலோகம், உனக்கு வெல்லமும் ஒருபடி நெய்யும் கலந்து சமைத்த சர்க்கரைப் பொங்கல்போ லிருந்ததோ, அல்லது கையிலெடுக்கத்தான் போதுமாயிருந்ததோ;—மற்றுச் சுவையும் அற்றதாய் வயிறுநிறைவதற்கும் போதாதாயிருக்கும் இவ்வுலகை ஏனெடுத்து உண்டனை]

என்று பிள்ளைபெருமாள் ஐயங்கார் திருவரங்கத்தந்தாதியிற் பாடிய செய்யுள் உதவியா யமைந்திருக்கின்றது. இன்ன திறல்வாய்ந்த மாவலி,

செய்தவர் வானவ ருஞ்செய லாற்றா
நெய்தவழ் வேள்வியை முற்றிட நின்றான்
ஐயமில் சிந்தைய னந்தணர் தம்பால்
வையமும் யாவும் வழங்க வலித்தான்.

[தவசிகளும் தேவர்களும் செய்யமுடியாத ஒரு பெரிய யாகத்தை நெய்சொரியச் செய்துமுடிக்கத் தலைப்பட்டுத் தன்னுடைய கருமம் தக்கதோ அல்லதோ என்னும் ஐயமற்ற சிந்தையனாகிப் பிராமணர்களுக்குப் பூமியையும் மற்ற யாவையும் தானமாக அளித்துவிட எண்ணங் கொண்டான்]

ஆயத றிந்தனர் வானவ ரந்நாள்
மாயனை வந்து வணங்கி யிரந்தார்
தீயவன் வெந்தொழி றீரென நின்றார்
நாயக னும்மது செய்ய நயந்தான்.

[அதனை அறிந்த தேவர்கள் உடனே இங்குத்தவம்செய்திருந்த திருமாலிடம் வந்து வணங்கி, "இந்தத் தீயவன் செய்கின்ற கொடியதொழிலைத் தீர்த்தருள்வாய்" என்று வேண்டிநிற்க, நாயகனும் அதனைச்செய்ய விரும்பினான்]

வானவர் செய்தி இங்கு மயக்கத்திற் கிடமாயிருக்கின்றது. அவர், மாவலி செய்யும் எத்தொழில் வெந்தொழிலெனக் குறித்துத் திருமாலை வந்து தீர்க்கச் சொல்கின்றனர்? மாவலி ஆற்ற நினைத்தது பெரும் வேள்வி ஒன்று. அவ்வேள்விக்கு அங்கமாக உலகத்தை அதனிலுள்ளவைகளோடு ஒருபிராம்மணனுக்குத் தானம் செய்யவும் நினைத்தான். இவை இரண்டும் கொடிய தொழில்கள் ஆகாவே. இவைகளைச் செய்யப் புகுவதால் அவன் தீயவனும் ஆகான். எனின் திருமால் தீர்ப்பதற்குள்ள தீமையாதெனத் தேர்தல் அருமையாகின்றது. இவன் இந்திரனது பதவியைப் பெறுவதற்கு இந்த யாகத்தைச் செய்திருப்பானாயின், அசுரருக்குக் குலப் பகையாய தேவர்கள் அவனைத் தீயவன் என்றும் அவன் செய்யும் வேள்வியை வெந்தொழில் என்றும் அழைப்பது ஒருவாறு பொருந்தும். வானவர்க்கு நாயகன் மாவலியின் வேள்வி முற்றுவண்ணம் முயல்வதும் உணர்தற்பாலது. ஆனால் தான் இந்திரன் ஆகவே மாவலி வேள்விபுரிய நினைத்தான் என்று கூறுதற்குக் கம்பர் செய்யுள்களில் ஆதாரம் இலது. வான்மீகத்திலும் இருப்பதாகத் தோன்றவில்லை. அல்லாது வையமும் யாவும் வழங்க வலித்த இவ்வள்ளல், இந்திரன் தாதனத்திற்கு அவாவினன் என்று எளிதில் எண்ணுதற்கு மியன்றிடாது.

வேள்வியை வெந்தொழிலென்று மதிப்பதற்கு நியாயமில்லையெனில், அவன் அந்தணருக்கு வையமும் யாவும் வழங்க வலித்ததை வானவர் கடிந்திட நினைத்த வாறாதல்வேண்டும். வையத்தை ஆளும் நேர்மை அரசர்தம் இனத்தோர்க்கே உரியதாதலால், அந்தணருக்கு மாபலி வையத்தை முறைமாறி நல்கி, வருணதருமம் பிறழும்படி செய்யவொண்ணாது என்ற உணர்ச்சியால் வானவர், அவனைத் தீயவன் என்றும் அத்தொழிலை வெந்தொழிலென்றும் கருதலாயினர்போலும். ஆயினும் வரையிலாது வையமெலாம் ஈயும் ஓர்வண்மையைப் பாத்திரத்தின் வருணம்நோக்கித் 'தீயவன் புரியுமொரு வெந்தொழில்' எனக் குறித்தல் வன்சொல் மிகுந்தவோர் கூற்றாம். தனக்கு ஒரு சுயநலமும் வானவர்க்குத் தீங்கொன்றும் கருதாது தூயவொரு யாகத்தைத் தொடங்கிய செய்கையைத் "தீயவன் வெந்தொழில்" என்னும் வசைக்கு இலக்காக்காமல் காக்கவேண்டுமாயினும் அத்தொடர் வேறொரு பொருள்கொண்டு இணங்குகின்றது. 'அக்கினிக்கடவுள் விரும்புகின்ற தொழிலாகிய இவ்வேள்வியை நீ தீர்க்கவேண்டும்' என்று வானவர் கூறி இரந்தார் என்னும் பொருளும் அமையும். * ஆயின், மாவலியை ஒன்றும் வைவதின்றியே, அவன் செய்யும் யாகத்திற் கங்கமாய்ச் செய்வதற்கிருந்த தானத்தால் சாதியொழுக்கம் பிறழா திருக்கும்பொருட்டுக் காக்க வேண்டும் என்பதையே தேவர் வேண்ட அதற்குத் திருமாலும் இசைந்தவனாகின்றான் துட்டனுமல்லன் மாவலி, அவன் தொழில் கொடியது மன்று. 'தீத்தொழில்' என்பதை இவ்வாறு அக்கினிகாரியம் என்னும் பொருளில், "சிந்துநிகர் தானையாய் தீத்தொழிலைச் செய்வோர்கள் அந்தணரே நின்நாட்டகத்து" என்று சிலேடைவாயிலாக ஒழித்துக்காட்டுவதற்குப் பிறரும் உபயோகித் திருக்கின்றனர்.

இவ்வாறு தீயவன் வெந்தொழில் தீர்க்க நயந்த அண்டர் நாயகன் பின்னர், வளர்வதற்கிருக்கின்ற ஆலமரம் அவ்வளவும் அடங்கியுள்ள அதன் விதையைப்போல் அரும் குறள் ஆகிக் காசியபனுக்கும் அதிதிக்கும் ஒரு மகவாய்ப் பிறந்து, முப்புரிநூல் மார்பிற் புரளவும் தருப்பைநாண் அரையில் விளங்கவும் வேதமந்திரங்கள் நாவிற் பழகவும், மகாபலிசக்ரவர்த்தி இருந்தவிடம் எய்தினான். வந்தவனை உலகம் மூன்றும் வென்றிருந்த மாவலி, விரைந்து எதிர்கொண்டு கூறியமுகமனும் அதற்கு வாமனன் வழங்கிய வினயமொழிகளும் மிக அழகாய்க் கோசிகன் வாக்கில் அமைந்திருக்கின்றன. 'உருவுகண் டெள்ளாமை வேண்டும்' என்னும் வாய்மையைப் பெருந்தகை மாவலிக்கு யாரும் கற்பிக்க வேண்டியதில்லை. "நின்தனின் அந்தணர் இல்லை, நிறைந்தோய், நீ எய்தப்பெற்ற என்தனின் உயர்ந்தவர் யார் இனி" என்றான்.

ஆண்டகை யவ்வகை கூற வறிந்தோன்
வேண்டினர் வேட்கையின் மேற்பட வீசி
நீண்டகை யாயினி நின்னுழை வந்தோர்
மாண்டவ ரல்லவர் மாண்பில ரென்றான்.

[ஆண்மை வாய்ந்த மாவலி அவ்வாறு கூற, எல்லாம் அறிந்த இறைவன், "உன்பால் வந்து இரப்பவர்தம் ஆசைக்கும் அதிகமாகக் கொடுத்துக்கொடுத்து நீண்டிருக்கின்ற கையை உடையவனே, உன்னிடத்தில் வந்தவர்களே மாட்சிமை அடைந்தவர்களாவர். மற்றவரெல்லாரும் வேறு எது பெற்றிருப்பினும் மாட்சிமை யடைந்தவராகார்"] என்று வாமனனும் எதிருபசரிக்கத் தன் கொடையைச் சிறப்பித்து அழைத்த முகத்தானே இவன் தன்பால் யாதோ பெற்றுக்கொள்ளுமாறு வந்துளன் என்பதை ஊகித்து மாவலி,

சிந்தை யுவந்தெதி ரென்செய வென்றான்
அந்தணன் மூவடி மண்ணரு ளுண்டேல்
வெந்திற லாயிது வேண்டு மெனாமுன்
தந்தன னென்றனன் வெள்ளி தடுத்தான்.

[மனமகிழ்ந்து, "இதற்கு யான் எதிராக என்ன செய்ய வேண்டும்," என்று கூற, வாமனன், "மிகுந்த திறமை வாய்ந்தவனே, உன்னிடத்தில் உளதாயின், எனக்கு மூன்றுஅடி நிலம் தரூஉ. யான் வேண்டுவது இவ்வளவே" என்று கேட்டுமுடிப்பதன் முன் மாவலி 'கொடுத்தேன்' என்றவுடன், அருகிருந்த சுக்கிராசாரி தடுத்தான்]

'உண்டேல் அருள்' என்று வாமனன் இங்கிதம் பயின்றிரானாயின் வெள்ளியும் யாதும் அயிர்த்திரான். இச்சொல் புகுந்து தூண்ட வெள்ளி தன் ஞானதிருட்டியைச் செலுத்தியிருப்பான். ஆதலாற்றான் தடுத்து,

* தீயவன் = தீக்கடவுளாகிய அக்கினிபகவான், வெம்-விரும்புகின்ற, தொழில்-காரியம் = யாகம்.

கண்ட திறத்திது கைதவ மைய
கொண்ட னிறக்குற ளென்பது கொள்ளேல்
அண்டமு முற்று மகண்டமு மேனுள்
உண்டவ னாமி துணர்ந்துகொ ளென்றான்.

[ஐய, கண்ணாற் காணுமளவில் இதுவொரு பெரு மோசம் ஆகும். இவனை மேகநிறங் கொண்ட ஒரு குற ளென்று எண்ண வேண்டா. அண்டமும் அகண்டம் முழுவதும் முன்னே உண்டவனே இவன். இது தெரிந்து அதற்கேற்றவாறு செய், என்றான்.]

இன்னவாறு சுக்கிரன் இடைப்புகுந் தறைந்தபோது மாவலி இமையளவும் தாழாமல்,

நினைக்கிலை யென்கை நிமிர்ந்திட வந்து
தனக்கிய லாவகை தாழ்வது தாழ்வில்
கனக்கரி யானது கைத்தல மென்னின்
எனக்கிதன் மேனலன் யாதுகொ லென்றான்.

[என்னுடைய கை மேலாக, ஒருபோதும் தாழாத மேகநிறத்தையுடைய ஒருவன் கை தன்னுடைய இயற் கைக்கு மாறாக வந்து தாழ்கின்ற தென்றால், எனக்கு இதைவிட உயர்ந்த நலம் வேறு எது எய்தக் கூடும், இதனை நினைக்காமல் உரைக்கின்றாயே]

என்று எதிர் விளம்பியதை நோக்குங்கால், அவனுக்குச் சுக்கிரன் சொன்ன நெய்தி புதியதொன்று மன்றபோல் தோன்றுகின்றது. "உலகெலாம் உண்டவன்தன் கைக் கீழதாக என்முன் வந்து இரந்துநிற்க, யான் கையுயர்த்தி அவனுக் கொன்று கொடுப்பதென்றால் என்னில் உயர்ந் தவர் யாரினி!" என்று மாவலி கொண்ட பெருமிதம் செருக்கின்பாற் படாமல் செம்மைசேர் நிலையாமாறு உரைக்கவல்லார் கம்பர்களே யாவர். இருவர்தம் தன்மை, வேறு செயல்களில் எவ்வாறு மாறித் தோன்றினும் ஈவ தும் ஏற்பதும் நேர்கின்ற காலத்தில் பிறிதொன்றும் கரு தாமல், கொடுப்பவனை உயர்ந்தவனென்றும் வாங்குபவ னைத் தாழ்ந்தவனென்றும் கூறிவிடலா மென்னுமிக் கொள்கையை மகம்மது நபி விளம்பிய அறவுரைக ளொன்றில், "எப்படியாயினும் நிமிர்ந்த கை தாழ்ந்த கையிற் சிறந்தது" என வந்திருக்கக் காணலாம். மெய்யின்பால் அறிவின்பால் இறைவனருளின்பால் பற்றகலாச் சித்தமுடைய உத்தமர்க்குக் கருத்தன்றி, அக்கருத்தினைத் தெரிவிக்குஞ் சொற்களும் ஒன்றேயாய் விளங்குமிது புதியதன் றெனினும் நம்மனோரால் பணி வுடன் பாராட்டற் கொத்ததாம்.

இனிவரும் செய்யுள்களில் சீடன் தன் குருவிற்கு ஈகையின் இலக்கணத்தை வகுத்தோதும் செவ்வியைக் காண்கின்றோம். ஈகை இரவு இரவச்சம் என்னுமிம் மூன்றின் தன்மையும் தொடர்பும் அரியதோர் வகையில் ஆயப்பெற்று இப்பாசுரங்களில் அமைந்திருக்கின்றன.

"ஏற்போன் கொடியதோர் பகையே பூண்டு அளிப்ப வனை அழிக்கவந்தாலென்; நட்பினனாலவனை வாழ்விக்க வந்தாலென்! அமரருக்கு அண்மியனாகிய இவன் கைத வஞ் செய்தென்னைக் கவிழ்க்க முயல்கின்றா னென்ற புணர்ப்பினால், வரையிலாது கொடுப்பதென்ற கொள்கை யில் தலைநின்ற யான் இன்று மறுப்பனோ! நண்ணினர் நண்ணலார் என்னும் வேறுபாடு கொடையின் திறத்தில் அறநூல்கள் கூறவில்லையே." என்று செப்புவானாகிய மாவலி,

துன்னினர் துன்னல ரென்பது சொல்லார்
முன்னிய நன்னெறி நூலவர் முன்வந்
துன்னிய தான முயர்ந்தவர் கொள்க
என்னி னிவன்றனை யாவரு யர்ந்தார்.

என வினவியவுடன் அவன் தனதுரையைத் தானே சிறிது திருத்திக் கொள்வதற்கு விரைந்தான். "உன்னிய தானம் உயர்ந்தவர் கொள்க" என்ற வாசகத்தில் தாழ்ந்தவர்களுக்குத் தானம் அளிக்கப்படா தென்னும் மறுப்பு அடங்கியிருக்கின்றது. சத்பாத்ர தானத்தின் தகுதியைச் சாத்திரங்கள் வற்புறுத்துகின்ற மிகுதியில் பழகியுள்ள மாவலி மதிசிறி தயர்ந்து தன்னுடைய வண்மை இயற்கைக்கு மாறாக அவ்வாறு கூறிவிட்டான். வள்ளியோர் இரப்பவரின் குணத்தையும் நோக்கத்தை யும் ஆயப்புகுவது தகவிலாச் செய்கையாகும். கொடுப் பதற்கு மனமில்லா நிலையிற்றான் மாந்தர் பாத்திரத்தின் உட்புறம் பார்க்கப் புகுவார். பெறுகின்றவன் கடையாய கயவனா யிருப்பானெனினும் கொடையினால் கேடு எங்ங னம் விளைதல் கூடும். ஈதல் என்பது ஓர் அறம். அவ் வறத்தினைச் செய்யுங் காலையில், அதற்கயலாய சிலவற் றைச் சார்த்தி எண்ணுவதால், தீமை விளையுமோ என் னும் சங்கை கொள்வானேன். தீமையால் நன்மை விளையாதென்பது போன்றே, நன்மையைச் செய்வதால் தீமையொன்றும் விளைந்திடல் இயலாதென்னும் நிரந் தர வாய்மையை அயர்ந்தே, பாத்திரமறிந்து பிச்சையிட விதித்தவர் விதித்துளார். நன்மக்கள் கையடைந்த தானம் பயனளிக்கும் பான்மையில் தழைப்பது இயற் கையே யாயினும், கீழ்மக்களுக்குக் கொடுத்த தானம், கொடுத்தவனுக் கேனும் பெற்றவனுக்கேனும் மற்றெ வர்க்கேனும் தீமையே புரிந்திடும் என்று எதிருரைப் பது நேரன்று எனத் துணிந்த மாவலி, "உன்னிய தானம் உயர்ந்தவர் கொள்க" என்று தான் உரைத்த வாசகத்திற்கு மாற்றாக,

வெள்ளியை யாதல் விளம்பினை மேலோர்
வள்ளிய ராக வழங்குவ தல்லால்
எள்ளுவ வென்சில வின்னுயி ரேனும்
கொள்ளுதல் தீது கொடுப்பது நன்றால்.

[வெள்ளி என்ற பேரையுடையவனாதலால் இவ்வாறு கூறினாய். உத்தமர்களா யிருப்பவர்கள், வள்ளியோர் என்ற தன்மையில், கேட்பவர் யாவரா யிருப்பினும் எதனைக் கேட்பினும் வேறொன்றும் கருதாமல் வழங்கி விடுவதல்லாமல், இரப்போன் தகுதி யற்றவனென்றும், இரக்கத் தகாததை அவன் இரக்கின்றா னென்றும் சில சொல்லிப் பழிப்பதால் ஏது பயன்!—இனிய உயிராயி னும் பிறன் கைநின்று யாசித்துப் பெறுவது தீது; அவ் வுயிரையுமே பிறனொருவன் யாசிப்பானாயின் கொடுத்து விடுவதே நல்லது.]

என்று விரைவிற் சாற்றினான். பாத்திரத்தைப் பழித்து எள்ளப் புகுந்தானாகையால் சுக்கிரனுக்கு வெள்ளி யென்று வைத்த பேர் தக்கதே யாயது. வெள்ளி, என்னும் சொல்லிற்குச் சிலப்பதிகார அரும்பத உரையாசிரியர், 'பயனில்லாத உரை பேசுவோன்' என்று பொருள் கூறுவார்.

T. N. சேஷாசலம்.

தமிழ்ப் பாடம் 43.

நள வெண்பா

(830-வது பக்கத் தொடர்ச்சி)

கலிதொடர் காண்டம்.

போயொருகான் மீளும் புகுந்தொருகான் மீண்
ஆயர் கொணர்ந்த வடுபாலின்—தோயல் [டேகும்
கடைவார்தங் கைபோலு மாயிற்றே காலன்
வடிவாய வேலான் மனம். 103.

பதப்பிரிவு:—போய் ஒருகால் மீளும் புகுந்து ஒரு கால் மீண்டு ஏகும் ஆயர் கொணர்ந்த அடு பாலின் தோயல் கடைவார்தம் கை போலும் ஆயிற்று காலன் வடிவு ஆய வேலான் மனம்.

அன்வயம். காலன் வடிவு ஆய வேலான் மனம், ஆயர் கொணர்ந்த அடுபாலின் தோயல் கடைவார்தம் கை போலும் ஆயிற்று. (எனவே அவன்) போய் ஒரு கால் மீளும், புகுந்து ஒருகால் மீண்டு ஏகும்.

பதவுரை.

காலன் - எமன் போன்ற
வடிவு - தோற்றத்தை உடையது
ஆய - ஆகிய
வேலான் - வேலை ஏந்திய நளனுடைய
மனம் - மனமானது,
ஆயர் - இடையர்கள்
கொணர்ந்த - கொண்டுவந்த
அடு - காய்ச்சிய
பாலின் - பாலினது
தோயல் - தயிரை
கடைவார்தம் - கடைகின்றவர்களுடைய
கை போலும் - கைகளைப்போல்
ஆயிற்று - ஆயிற்று (ஆகலால் அந்நளன்)
போய் - (அப்பாழ் மண்டபத்தை விட்டு) போய்
ஒருகால் - ஒருமுறை
மீளும் - (மண்டபத்திற்கு) வருவான்.
புகுந்து - (அவ்வாறு மண்டபத்துள்) புகுந்து
ஒருகால்-ஒருமுறை
மீண்டு - மறுபடியும்
ஏகும் - போவான்.

இவ்வாறு அவன் அங்குப் பலமுறை வருவதும் போ வதும் ஆயினான்.

விரிவுரை:—நளனுடைய கையில் இருந்த வேலானது பார்த்த மாத்திரத்தில் செத்தோம் என்னும் அச்சம் விளைப்பதால், பகைவர் தங்களுக்கு, எமனைப்போல் தோன்றும், என்ற கருத்தில் 'காலன் வடிவாய வேலான்' என்று கவி அவனைக் குறிக்கின்றார்.

தயிர் கடைகின்றவர் கைகள் நெருங்கியபாடுமில்லாமல் அகன்றபாடுமில்லாமல் வருவதும் போவதுமா யிருக்கு மாதலால் அவை, தமயந்தியைவிட்டுப் பிரியச் சகியாமல் அவளோடு இருந்துவிடுவதென்று ஒருபோதும், அவளு டைய நன்மையைக் கருதுங்கால் போவதே நலமென்று மறுபோதும் மாறிமாறி நினைத்தலைகின்ற நளனுடைய மனதிற்கு உவமையாயின. இன்னபடி ஒருபால் படாத உள்ளத்தவனாய் இருந்தான் ஆதலால் அவன் அவளைப் பாழ்மண்டபத்தில் விட்டகல்வதெனின் அகலாது, அவளோடு இருப்பதெனின் இருக்காது அங்கு வருவதும் மீண்டு போவதுமாய் நெடுநேரம் உழன்றிருந்தான்.

குறிப்பு:—மீளும், ஏகும் என்னுமிச் சொற்களுக்கு மீளுவான், ஏகுவான் என்று பொருள் கொள்ளவேண் டும். இவ்விதமே, செய்யும், என்பதுபோல் முடிகின்ற வினை முற்றுக்களெல்லாம் ஆண்பால், பெண்பால் ஒன் றன்பால் பலவின்பால் ஆகிய நான்கு பால்களுக்கும் பொதுவாய்ச் செய்யுள்களில் வரும். எழுந்திருக்கும், விழுந்திருக்கும் சேர்க்கும், என்று முன் (சுயம்வர காண் டம், 109-வது செய்யுள் 407-வது பக்கம்) பெண் பாலுக்குச் செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்றுக் கள் வந்திருக்கின்றன. கிளி பேசும், குதிரை ஓடும், என்று ஒன்றன்பாலிற்கு இந்த வாய்பாட்டு வினைமுற் றுக்கள் வழக்கத்திலும் வருவது யாவரும் அறிவர். மரங்கள் வளரும், நாய்கள் குலைக்கும், என்று பலவின் பாலுக்கும் வரலாம். ஆனால் பலர்பாலிற்குமாத்திரம் வருவதில்லை. அவர்கள் வரும், மனிதர் இங்கு வாழும், என்று சொல்வது பிழை; அவர்கள் வருவார், மனிதர் வாழ்வார் என்றே கூறவேண்டும்.

சிந்துரத்தாற் றெய்வ முனிவர் தெரிந்துரைத்த
மந்திரத்தாற் றம்பித்த மாநீர்போல்—முந்த
ஒலித்ததேர்த் தானை யுயர்வேந்த னெஞ்சம்
வலித்ததே தீக்கலியால் வந்து. 104.

பதப்பிரிவு:-சிந்துரத்தால் தெய்வ முனிவர் தெரிந்து உரைத்த மந்திரத்தால் தம்பித்த மாநீர் போல் முந்த ஒலித்த தேர் தானை உயர் வேந்தன் நெஞ்சம் வலித்தது தீ கலியால் வந்து.

அன்வயம்:—சிந்துரத்தால் தெரிந்து தெய்வ முனி வர் உரைத்த மந்திரத்தால் தம்பித்த மாநீர்போல், முந்த ஒலித்த தேர்த்தானை உயர்வேந்தன் நெஞ்சம் வந்து தீக் கலியால் வலித்தது.

பதவுரை.

சிந்துரத்தால் - (கங்கையாறு தம்மை முழுக்க வரு கின்ற தென்பதை ஐராவதம் என் னும்) யானையால்
தெரிந்து - அறிந்துகொண்டு
தெய்வமுனிவர் - தெய்வத்தன்மை பொருந்திய நாரத முனிவர்
உரைத்த - சொன்ன
மந்திரத்தால் - மந்திரத்தால்
தம்பித்த - (பாயாமல்) நின்றுவிட்ட
மா - பெரிய
நீர்போல் - கங்கையின் நீரைப்போல,
முந்த - முதலாக
ஒலித்த - சப்தித்த
தேர் - தேர்களின்
தானை - சேனையையுடைய
உயர் - மேலான
வேந்தன் - அரசனாகிய நளனது
நெஞ்சம் - மனம்
வந்து - (தமயந்தியின் பால் நாடாமல்) வந்து
தீ - கொடிய
கலியால் - கலியினால்
வலித்தது - வன்மையுற்றது.

விரிவுரை:—எப்பொழுதும் நீர்போல் இளகித் தமயந்தியின்பால் பாயும் தன்மையுள்ள நளனுடைய மனம் இப்பொழுது கலி செய்த காரியத்தினால் அவளிடத்தில் செல்லாமல் தன்னிடத்திலேயே தப்பித்து நிற்கும் வன்மையைப் பெற்றது. இதற்கு உவமையாகப் புகழேந்திப் புலவர், நாரதர் ஓதிய மந்திரத்தால் கங்கை நீர் தம்பித்த கதையை இங்குக் குறிக்கின்றாரென்றும், அந்தக் கதை ஜயமுனி பாரதத்தில் காணப்படுகின்றதென்றும் உரையாசிரியர் கூறுகின்றனர். அது பின்வருமாறு:—நாரத முனிவர் சிலமுனிவர்களோடு கங்கையின் கரையை ஓரிரவு அடைந்து அங்கு நாராயணநாம பஜனையில் மெய்ம் மறந்திருந்தனர். அப்பொழுது, வந்த அம்முனிவர்கள், தன்னைப் பணிந்து துதித்திலர் என்னுங் கோபத்தால் கங்கைநதி வெள்ளம் புரண்டு அவர்களை முழுக்க வந்தது. பக்திப் பரவசமாயிருந்த முனிவர்கள் இது அறியாமல் இருப்பதைக் கண்டு, தேவேந்திரனுடைய ஆனையான ஐராவதம் அவ்வாற்றங் கரைக்கு வந்து நீர் குடிப்பதுபோல் பாவனைசெய்து சிறிது ஜலத்தை எடுத்து நாரதர்மீது தெளிக்க, அவர் கண் விழித்துப் பார்க்கவே எழுந்துவரும் வெள்ளத்தைக் கண்ணுற்று ஒரு மந்திரத்தைச் சொன்னார். உடனே அவ் வெள்ளம் பாயமுடியாது இருந்த இடத்திலேயே ஸ்தம்பித்து நின்றது. அப்புறம் அந்நதி தன்பிழை பொறுக்குமாறு நாரத முனிவரை வேண்டி அவர் அருள்பெற்றுப் பழையபடி பாய்ந்தோடியது.

பாய்கின்ற வெள்ளம் நாரதர் மந்திரத்தால் அல்லாது ஸ்தம்பம்போல் நிற்க இயலாது. அவ்விதமே கலியின் செய்கையாலேயே நளன் மனமும் தமயந்தியினிடம் செல்லாத வன்மையைப் பெற்றது, என்பது இச்செய்யுளின் கருத்து.

தீக்கா னகத்துறையுந் தெய்வங்காள் வீமன்றன்
கோக்கா தலியைக் குறிக்கொண்மின்—நீக்காத
காதலன்பு மிக்காளைக் காரிருளிற் கைவிட்டின்
றேதிலன்போற் போகின்றேன் யான். 105

பதப்பிரிவு:—தீ கானகத்து உறையும் தெய்வங்காள் வீமன் தன் கோ காதலியை குறிக்கொள்மின் நீக்காத காதல் அன்பு மிக்காளை கார் இருளில் கைவிட்டு இன்று ஏதிலன் போல் போகின்றேன் யான்.

பதவுரை.

நீக்காத - (என்னிடத்திலிருந்து ஒருபோதும்) [அகற்றாத
காதல் - காதலும்
அன்பு - அன்பும்
மிக்காளை - மிகுந்தவளாகிய தமயந்தியை
கார் - கரிய
இருளில் - இருட்டில்
கைவிட்டு - கைவிட்டு
ஏதிலன் போல் - சத்துருவைப்போல்
யான் - நான்
இன்று - இப்பொழுது
போகின்றேன் - போய்விடுகின்றேன்.

(ஆகையால்)

தீ - கொடிய
கானகத்து - காட்டில்
உறையும் - வசிக்கும்
தெய்வங்காள் - தெய்வங்களே (நீங்கள்)
வீமன்தன் - வீமராஜனுடைய
கோ - சிறந்த
காதலியை - புத்திரியை
குறிக் கொண்மின் - கவனித்துக் காக்கும்படி வேண்டிக் கொள்கின்றேன்.

விரிவுரை :— "காட்டிலே கொண்டுவந்து தன் மனைவியை விட்டுவிட்டுப் போகின்றவனைவிடக் கொடியவன் வேறொருவன் உண்டோ. மதியின்றி நான் ஆடிய சூதினால் இவளுக்கு அளவற்ற துன்பங்களை உண்டாக்கி யிருக்கின்றேன். அப்படி யிருந்தும் அவள் என்னிடத்தில் வைத்த அன்பையும் காதலையும் நீக்காது இன்னமும் முன்போலவே பாராட்டுகின்றாள். அன்னவளுக்கு நான், சத்துரு செய்கின்ற காரியம் செய்கின்றேனே என்று என்மேல் கொண்ட வெறுப்பால், அவளை நீங்களும் கைவிடாதீர். 'என் மனைவி' என்ற தன்மையில் அவளை நீங்கள் காக்க வேண்டும் என்று, அவளுக்கு நாயகனாக நான் உங்களை வேண்டிக் கொள்ளும் உரிமையை இழந்து விட்டேன். ஆதலால் 'வீமராஜன்தன் செல்வ மகள்' என்ற நினைவு கொண்டு அவள் தந்தையைக் கருதியேனும் அவளைக் காப்பது உங்கள் கடன்" என்னுங் கருத்தோடு நளன் தமயந்தியை வனதேவதைகளிடம் கையடைத்துக் கொடுத்துவிட்டுப் போகின்றான்.

'காதல் அன்பு மிக்காளை' என்பதில் காதல் அன்பு என்னும் இரண்டும் ஒரே பொருளில் வந்த இரண்டு சொற்கள் என்றேனும், தானொன்று பெறுவதற்கு ஆசைப்படுவதைக் காதல் என்றும், கொடுப்பதற்கு ஆசைபடுவதை அன்பு என்றும், இரண்டாக வேனுங் கொள்ளலாம். அப்பொழுது, "என்னால் தனக்கும், தன்னால் எனக்கும் இன்பநலங்கள் பெருகவேண்டுமெனும் விருப்பம் மிகுந்தவள்" என்பது நளனுடைய கருத்தாகும். அல்லது, 'காதலின் அன்பு மிக்காள்' என்று கொண்டு, "என்னால் இன்பமும் நலனும் பெறவேண்டும் என்னும் கருத்தைக் காட்டிலும் எனக்கு இன்பமும் நலங்களும் அளிக்க வேண்டுமென்னும் விருப்பமே மிகுந்தவள்" என நளன் கருதி யியம்பினான் என்பதும் பொருந்தும்.

ஏந்து மிளமுலையா ளின்னுயிருந் தன்னருளும்
பூந்துகிலும் வேறாகப் போயினான்—தீந்தேன்
தொடைவிரவு நாண்மாலை சூட்டினா டன்னை
இடை யிருளிற் கானகத்தே விட்டு. 106.

துகிலை அரிந்துகொண்டு நளன் தமயந்தியை விட்டுப் போயினான் என்பதை இச்செய்யுளும் அடுத்த செய்யுளும் கூறுகின்றன.

தாருவெனப் பார்மேற் றருசந் திரன்சுவர்க்கி
மேருவரைத் தோளான் விரவார்போல்—கூரிருளில்
செங்கா னகஞ்சிதையத் தேவியைவிட் டேகினான்
வெங்கா னகத்திலே வேந்து. 107.

நீல மளவே நெகிழ நிரைமுத்தின்
கோல மலரின் கொடியிடையாள்—வேல்வேந்தே
எங்குற்றா யென்னா வினவளைக்கை நீட்டினாள்
அங்குத்தான் காணா தயர்ந்து. 108.

பதப்பிரிவு:—நீலம் அளவே நெகிழ நிரை முத்தின் கோலம் மலர் இன் கொடி இடையாள் வேல் வேந்தே எங்கு உற்றாய் என்னா இன வளை கை நீட்டினாள் அங்குதான் காணாது அயர்ந்து.

அன்வயம் :—கோல மலரின் கொடி இடையாள், "வேல்வேந்தே, எங்கு உற்றாய்" என்னா இனவளைக் கை நீட்டி, அங்குத்தான் காணாது, நீலத்தின் அளவே நிரைமுத்து நெகிழ, அயர்ந்தாள்.

பதவுரை.

கோலம் - அழகிய
மலரின் - மலர்களையுடைய
கொடி - கொடிபோன்ற

இடையாள் - இடையை உடைய தமயந்தி (சிறிது நித்திரை தீர்ந்ததும் அயலில் நளன் இல்லாதலால்)
"வேல் - வேலை ஏந்திய
வேந்தே - அரசனே,
எங்கு - எவ்விடம்
உற்றாய் - சென்றாய்"
என்னா - என்று,
இனம் - வரிசையாகிய
வளை - வளையல்களை அணிந்த
கை - கையை
நீட்டி - நீட்டி (தடவிப்பார்த்து)
அங்குத்தான் - அங்கும்கூட
காணாது - காணாமல்,
நீலத்தின் - நீலமலர்போன்ற அவள் கண்களின்
அளவு - முழுநீளமும்
நிரை - வரிசையாக
முத்து - முத்துக்கள்போன்ற கண்ணீர்த்துளிகள்
நெகிழ - உதிர
அயர்ந்தாள் - சோர்ந்தாள்.

குறிப்பு:— (1) நீலம், முத்து என்னும் இவ்விரண்டு சொற்களும் உவமையாகு பெயராய்க் கண்ணையும் கண்ணீரையும் உணர்த்தின.

(2) வேல் வேந்து, என்பது வேலை ஏந்திய வேந்து என்று விரியுமாதலால், இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை. வளைக்கை, என்பதும் இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. வளையை அணிந்த கை, என்று விரியும். வளை, என்பதின் இறுதியில் உள்ள ஐ, உருபு அன்று. சொல்லின் உருவமே வளை. இரண்டாம் வேற்றுமை ஆயின் வளையை, எனவரும். கை நீட்டினாள், என்பது கையை நீட்டினாள் என்று உருபு மாத்திரம் விரியுமாதலால், இரண்டாம் வேற்றுமைத் தொகை.

அகப்பொருள் வரலாறு

189026

(835-வது பக்கத் தொடர்ச்சி)

வரைவிடைவைத்துப் பொருள் வயிற்பிரிவு.

ஓழே நாம் விரித்துரைத்தவாறு, தமது களவுக்கூட்டம் ஊரெங்கும் வெளிப்பட்டு அம்பலும் அலரும் எழுந்தபின், தலைமகன் தலைமகளை ஒருவழித் தணந்து பின் திரும்பி வந்தேனும், உடன்கொண்டு சென்றேனும், சென்று மீண்டேனும், வரைந்து கொள்ளுமாறன்றி, அக்களவொழுக்கம் தனதுயிர்ப்பாங்கனுக்கும் அவளது பாங்கிக்கும் அல்லாது பிறரெவர்க்கும் புலப்படுமுன்னரே முறைப்படி மணந்து கொள்ளலே மாண்புடைத்தென்றும், அதுவே சிறப்புற்ற நன்மணம் என்றும் குறித்தாம். அது நிகழ்வுறுமாறு இது.

அம்பலும் அலரும் எழுவதற்கு முந்தியே அவை எழாமற் காக்க விரும்பிய தோழி பொய்யுமெய்யுமான பல காரணங்களை எடுத்துக்கூறித் தலைவனை வரைவின் கண் முடுக்கலுற்று, "பாடறிந்தொழுகும் பண்புடைப் பெரியீர், ஏற்றிழிவுகளையும் பாராது, வருமேதங்களையும் நினையாது நீர் இவ்வாறொழுகுவது நன்றோ? தம் மகளிடத்து ஐயமுற்று அன்னைமார் என்னை வினவினார். நான், அவ்வாறு ஒன்றும் இல்லையென்று பொய்புகன்று அவருடைய சந்தேகங்களை ஒருவாறு உறங்கவைத்து விட்டேன். ஆயினும் எவ்வளவு காலம் உண்மையை மறைக்க முடியும்? அன்றியும் இது கர்ப்பத்துக்கேது வாதல் நம்மெல்லார்க்கும் பொல்லாதாய் முடியும். அது படுமுன் நீர் அவளுக்குப் பரிசமாக ஏமரால் தொடுக்கப்பட்ட அருங்கலன்களையும் இரும்பொன்னையுங் கொடுத்துச் சான்றோரை முன்விடுத்து அவளை வரைந்து கொள்ளும்." என்று வற்புறுத்தினாள். அதைக் கேட்டு அவனும் உடனே தெருண்டு, "காமக்கள்ளுண்டுகளித்து மதிமயங்கிய என்னைத் தெருட்டவந்த மடமயிலே, நீ சொல்லியவாறே இப்பொழுதே செய்கின்றேன். இன்றே சென்று தலைவியின் மெய்ந்நலனுக் கீடாக நுமர் வகுத்த பொருள்களை ஈட்டிக்கொண்டு இத்திங்கள் தேய்வதன்முன் திரும்பி வருகின்றேன். வரைவின் பொருட்டுப் பொருள்குறித்துப் பிரியும் என் பிரிவை அவளுக்குணர்த்தி நான் வருந்தினையும் அவளை ஆற்றுவித்திரு.

மதிமுற் றியதன்ன வாண்முகத் தாளை
வரையவல்லே
நிதிமுற்றி மீள்குவல், நீடநில்லேன், நெய்தல்
நீலவுண்கண்
நுதிமுற் றியகுழல் நுண்ணிடை யாரெதிர்
கொண்டுநுங்கள்
பதிமுற்றி மங்கலம் பாடிநின் றாடப்
பனிமொழியே.

என்று பாங்கிக்குரைத்து அவன் நீங்கினான்.

மறுநாள் தனக்கு அதைப் பாங்கி உரைக்கக் கேட்ட தலைமகன் அதைக் குறித்து மிகவும் வருந்தி,

பாவி எனக்குப் பரிசங் குறித்தாம் பல்கிளையோ,
நீவி அதற்கென்னை நீத்தவ ரோ, அவர் நீத்தபின்னும்
ஆவி தரித்துய்யும் மாசுடம் போ, இங் கறிகிலமால்,
யாவர் மடப்பிடி யேகொடி யாரிவ் விருநிலத்தே.

என்று மிகவுமிரங்கினான். அப்பொழுது பாங்கி, "அவர், போன காரியத்தை முடித்துக்கொண்டு ஒரு கணமும் வீணே தாழ்க்காது வந்துவிடுவார்,

பண்ணார் பனிமொழிப் பைந்தொடி யாய், வெந்த
பாலைவனம்
எண்ணா திருநிதிக் கேகினர் மீள்வர்,
எதிர்ந்தவலின்
கண்ணார் கின்னீரைத் தானுறு வேட்கை
கரந்து † கலை
உண்ணா ‡ தருணத்தை உண்டது போலகின்
றூட்டக்கண்டே

என்று தேற்றினான். அவ்வாறு அவன் தேற்ற ஒருவாறு தேறியிருந்த தலைவி அவர் திரும்பிவருவதாகச் சாற்றிய கார்காலம் வந்து மழை பொழியக்கண்டுக் கலாபம் விரித்தாடுங் கருமயிலைக் கண்ணுற்றுத் தன் காதலர் வாராமையை நினைந்து நெட்டுயிர்ப்பெறிந்து புலம்ப, அதைப் பார்த்துப் பாங்கியும், "அந்தோ

குணங்கெட வற்றிய கொம்புகள் யாவும்
குழைத்தமழைக்
குணங்குவ தென்னே இருகொம்பு மேய
ஒருகொம்புமே"

† கலை - ஆண்மான். ‡ அருணம் - (பெண்) மான்.

என்று தானும் பரிவுற்றமுது, "இன்னுரை மிழற்றும் இளங்குயிலே, இதனை நீ காலமாரியென்று கருதி அழுங்காதே. நமர், கருந்தினை யோம்ப மழையை வேண்டிக் கடம்பனைப் பரவிக் குரவையாட, நிம்பமாலை நிமலனருளால் * வம்பமாரி வந்ததிதுகாண்" எனப்பொய்யுரைத்து அவளைத் தேற்றினள். அதை அவள் மறுத்து "வாய்மை இலங்கும் வாள்விழி மாதே, நின் கையென்னக் காந்தள் எங்கும் பூத்தன; நின் செவ்வாயிதழென்ன இந்திரகோபங்கள் எங்கும் நிறைந்தன; நின் பல்லென்ன முல்லைகள் எங்கும் மலர்ந்தன. கொன்றையும் வேங்கையும் பொன்மலராற் பொலிகின்றன. மேகத்தினருகே மாலை மாலையாகக் கொக்குகள் பறக்கின்றன. இவ்வாறிருக்கவும் நீ இம்மழையை வம்பென்றல் மிக வம்பே" என்று இளையை ஏசிப் பின்னும் அன்பனை நினைந்துருகினள்.

இவ்வாறு தேற்றியுந் தேறாது தலைவனது பிரிவாற்றாமையால் மிகக் கலங்கிக் கலுழ்ந்து கண்சேந்து, நாளுக்குநாள் உடல் மெலிந்து, துயரமீக்கூற வருந்தாநின்ற தலைவி ஒருநாள் கழிபடரூற்றுக் கையற்றிருக்கக் கண்டு, பாங்கி அவளை அணுகி, "பிரிந்தகன்றவரைக் குறித்து இவ்வாறு நீ இன்னலுற்று மாழ்கினள், இப்பூம்பாவையன்னளுக்கு இவ்வேறுபாடு வந்தவாறு என்னோவென்று கண்டார் ஐயுற்றுக் காரணத்தை நாடலுறுவார். உன் அன்னையரும் உற்றதை அறிய வேலனை அழைத்து வெறியாட்டயர்ந்து உண்மையை உணரவுங் கூடும். ஆதலான் நீ ஆற்றியிருத்தல் வேண்டும். அவர் தாஞ் சொன்ன வார்த்தை ஒருபோதும் பொய்யார்; இன்று நாளை வந்துவிடுவார். இம்மேகங்கள் தமது வரவினைக் கூற அவர் முன்விடுத்த தூதெனக் கொள்." என்று வற்புறுத்தினள்.

இவ்வகைத் தோழி தெளிக்கச் சற்று மனந்தெளிந்து ஆற்றியிருந்த தலைவி, மறுநாள் தம்மனைக்கண் சிலர் மணம்பேச வந்ததைக் கண்டு, அவர்தாம் தன்னன்பர் அனுப்பிய தூதுவரென எண்ணி உவகையோடுந் தோழியை அழைத்து, வந்தவர் யாரென அறிந்து வரும்படி அனுப்பினள். அவள் சென்று விசாரித்து அவர்கள் அயலாரிடமிருந்து மணப்பேச வந்தவரென்று அறிந்துவந்து தலைவிக் குரைப்ப, அவள் உள்ளழிந்து முன்னிலும் மும்மடங்கு வருந்தி அழுங்காநின்றாள். அப்பொழுது செவிலித்தாய் அவளை எதிர்ப்பட்டு அடிதொட்டு முடிகாறும் நோக்கி, இவ்வாறு இவள் கண் சிவந்து, உடல் மெலிந்து, கவினழிந்து மெலிவதற்குக் காரணம் யாதாயிருக்குமென்று ஓர்ந்துணராமாட்டாது, அணங்குதீண்டப் பெற்றனளோ என்று ஆசங்கையுற்றாள். உற்றவள் உடனே † கட்டுவிச்சியை அழைத்து, தம் மகளுக்குற்றதை உணர்ந்து கூறும்படி வேண்டினள். அவளும், முந்நாழி முச்சிரங்கை நெல்லைக் கொண்டுவந்து ஒரு படி நெல்லை முறத்திலிட்டு முன் வைக்கச் சொல்லி, முறைப்படி தன்னிஷ்ட தெய்வத்துக்குப் பூசனை புரிந்து, ஆவேசமுற்று, வேர்த்து, விதிர்விதிர்த்து, மெய்சிலிர்த்துக் கைமோந்து, சுளகிலிருந்து சில நெல்லை வாரி வீசி எறிந்து, பின் அதிலிருந்த நெல்லை முக்கூறு செய்து ஒரு கூற்றையெண்ணிப் பட்டகுறியால் "இதன்கண் மயிலுங் கோழியும் வேலுந் தோன்றுவதால், இவளுக்கு முருகணங்கொழியப் பிறிதொன்றுமில்லை. நீ இனி வருந்தாதே,

பண்பட்ட சொல்லி பணைபட்ட பன்னிரு
தோள்படைத்தோன்
கண்பட்ட தன்றென் கழங்கினும் பட்டது;
கைமுறத்தில்
எண்பட்ட நெல்லிடை யும்மிது வேபட்ட
தின்றினிநீ
புண்பட்ட நெஞ்சொடும், அன்னை, இவ்வாறு
புலம்பல்நின்றே"

என்று கட்டுரைத் தகன்றாள்.

கட்டுவித்தியால் தம்மகள் முருகனால் அணங்கப்பட்டாள் என்றறிந்த * கோடாய், இந்நோய்க்குப் பரிகாரமாக நங்குல தெய்வமாகிய குமரக் கடவுளுக்கு வேலனைக்கொண்டு வெறியாட்டயர்வித்து மறிப்பலியும் ஈதுமென்று, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து நல்ல நாளையும் பார்த்து வைத்தாள். இவற்றையெல்லாம் கேட்டறிந்த தலைவி, "இவ்வெறியாட்டால் எனது நோய் தணியினும், தணியாவிடினும், இருதிறத்தானும் இனி எனக்கு உய்யுமாறில்லை. இதனால் நோய் தீர்ந்துவிடின், அதன் உண்மைக் காரணத்தை அறியாது எமர் என்னைப் பிறர்க்கு மணம்புரிந்தளிக்கக் கருதினுங் கருதுவர்; நோய் தணியாவிடின் என்னன்னைமாரும் பிறரும் பின்னும் நன்காராய்ந்து உண்மையை அறிந்தால் என்ன பேசுவரோ, யாது செய்வரோ?" என்று பலவாறெண்ணிப் பிறகு எப்படியாவது பாங்கியைக்கொண்டு வெறியாட்டை விலக்குவிக்க நினைத்தாள். நினைத்து, அவள் பாங்கியையுற்று, "என் இன்னுயிரனையாய், சென்றார் தந்த நோயை நின்றார் தீர்ப்பரென்று, நமர் வெறியாட்டெடுப்பது வெகு அழகு! நாணைத் துறந்து நம்மருமறையை வெளிப்படுத்தியேனும் இதைவிலக்கல் வேண்டும். என்னைத் தாய் முனியினும் முனிக; அயலார் ஏசினும் ஏசுக; ஊரார் நகினும் நகுக. இதை விலக்கி எனக்கு நல்லுயிர் அளித்திடு" என்று வேண்டினள். அப்படியே அவளும் வெறியாடுங் களத்துச் சென்று, வேலனை நோக்கி,

$ கடவுட் கற்சுனை அடையிறந் தவிழ்ந்த
பறியாக் குவளை நலரொடு காந்தட்
குருதி யொண்பூ உருகெழக் கட்டிப்
பெருவரை யடுக்கம் பொற்பச் சூர்மகள்
அருவி இன்னியத் தாடு நாடன்
மார்பு தரவந்த படர்மலி அருநோய்

* வம்பமாரி — பருவகாலத்து மழைபோல விடாது நின்று பெய்யாது சற்றுப் பெய்து நின்றுவிடும் அகால மழை.

† கட்டுவிச்சி - தெய்வ உபாசனையால் குறிபார்த்துச் சொல்லுங் குறமகள்.

* கோடாய் - செவிலித்தாய்.

$ (இதன் பொருள்) முருகவேளே; தெய்வத் தன்மை பொருந்திய மலைகளிலுள்ள சுனையில் இலைகளை ஒதுக்கிக் கொண்டு மேலே யெழுந்து மலர்ந்து (பூப்பலிக் கன்றிப்) பறிக்கப்படாத குவளை மலர்களோடு, குருதி போன்று செந்நிறம் வாய்ந்து விளங்கும் செங்காந்தள் மலர்களை அழகுபெறச் சேர்த்துக் கட்டிச் சூடிப், பெரிய மலையின் பக்கங்களெல்லாம் பொலிவுபெறச், சூரமகள் அருவியின் ஒலியே இனிய வாச்சியமாகக் கொண்டு ஆடுகின்ற மலைநாட்டையுடைய தலைவனது (மார்பைத் தழுவினதன் காரணமாக அம்) மார்பு தருதலாலே வந்த துன்ப மிகுந்த நீக்குதற்கரிய (இவள்) காமநோயானது நின்னால் பீடிக்கப்பட்டதா லுண்டாகியதோர் நோயன்று என்பதை நீ அறிந்திருந்தும், தலை நிமிர்ந்து, கார் காலத்தே மலர்கின்ற நறிய கடப்ப மாலையைச் சூடி வேலன் அழைக்க வெறிக்களத்தே (பலி பெற விரும்பி) வந்தவனே, நீ கடவுளர் பகுதியில் ஒருவனாக இருப்பினும் இருக்க. நிச்சயமாக நீ அறியாமையை யுடையவன். இவ்வறியாமையோடு நீ நீடு வாழ்வாயாக.

நின்னணங் கன்மை அறிந்தும் அண்ணாந்து
கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி
வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்,
கடவுள் ஆயினும் ஆக;
மடவை மன்ற; வாழிய முருகே.

என்று வெறிவிலக்குமாறு இகழ்ந்து கூறினள்.

இவ்வாறு இகழ்ந்துரைத்த மகளைச் செவிலி கையமைத்து, "எம்மகளின் நோயைப் போக்கும்பொருட்டு யாங்கள் வெறியாட் டெடுக்கலுற்றபோது நீ விலக்குகின்றாய். அந்நோய் இன்னதென்று நீ அறிந்திருந்தால் எமக்குரை" என்றாள். என்று கேட்ட தாயை அவள் தனித்தழைத்துச் சென்று, "முன்னொருநாள் நும் மகளோடு யாங்கள் வரையகத்தே பூப்பறித்துப் புனலாடாநிற்கையில், நும்மகள் அருவிச்சுழியில் அகப்பட்டுத் தவிக்கக் கண்டு அவ்வழிப் போந்த அண்ணலொருவன் துடுமெனப் பாய்ந்து அவளை அணைத்தெடுத்துக் கரையிற் சேர்த்தான். பின்னொருநாள் யாமிருவரும் தினைப் புனங் காத்திருந்த காலத்தில் மதகளிறொன்று அவளைத் தூரத்த அதனின் வெருவி ஓடும்போது அவள் அறிவு சோர்ந்து கீழே விழுந்தாள். அத்தருணம் அவ்வருளுடை அண்ணலே அங்கும் வந்து யானையைக் கடிந்துவிலக்கி அவளைத் தழுவியெடுத்து, மூர்ச்சை தெளிவித்து எம்மிதணத்திடைக் கொண்டுவந்து விட்டகன்றான். இவை அறியாக்காலத்து நிகழ்ந்தன வாயினும், பேரறிவினளாகிய நும்மகள் இன்று அவற்றை நெஞ்சிற் கொண்டு அவனைக்குறித்து மெலியா நின்றாள்.

* திருந்தா மொழியும்; திரளா முலையும்;
தரளமென்ன
முருந்தாகு மென்னகை மூரலுந் துய்ய;
முருகவிழ்பூங்
கருந்தாழ் குழலுமென் கைவந்த தில்லை;
கனங்குழையாய்,
அருந்தா அமுதமன் னாள்அறி வால்நின்னை
அன்னளின்றே"

என்று அவ்விருவர்க்குமுள்ள அனுபந்தமான அன்பை எடுத்துக் கூறினள். அதைச் செவிலி நற்றாய்க்குத் தெரிவிக்க அவளும் அதைத் தந்தைக்குந் தமையன்மார்க்கும் உணர்த்துவதற்குத் தக்க சமயத்தைப் பார்த்திருந்தாள்.

தம்மகளை மணம் பேசுமாறு பக்கத்திலுள்ள குன்றவாணர் பலரும் அனுப்பிய தூதரை வினவிக் குலத்தாலும் நலத்தாலும் வலத்தாலும் தம் மனதுக்கேற்ற மணமகன் எவனையுங் காணாது அவர்களையெல்லாம் தமர் நான்தோறும் மறுத்தனுப்பக் கண்ட தாய், அதுவே தம்மகளின் மனநிலையை அவருக் குணர்த்தி அதற்கிணங்கும்படி அவர்களைச் செய்வதற்குத் தக்ககாலம் என்றெண்ணி, அவர்களுக்கு மெல்ல உற்றதையெல்லாம் உரைத்தாள். அவற்றைக் கேட்டதும் அவர்களுக்கு மகளிடத்துச் சிறிது அப்பிரியமும், அவள் காதலன்மீது மிக்க வெகுளியும் தோன்றியவாயினும், சற்று நிதானித்து ஆலோசனை செய்தபின் எவ்வாற்றானும் அவனே அவளுக்குப் பொருந்திய நாயகனாகத் தோன்றக் கண்டு அவ்விருவரையும் மணங்கூட்டி வைப்பதற்கு அவரும் உடன்பட்டார்.

இங்கே இவர்களின் நிலை இத்தன்மையவாக, வரைபொருளீட்டச் சென்ற தலைமகன் அங்கே, தான் மீண்டு வருவதாக அறுதியிட்டுக் கூறிச் சென்ற கார்காலம் வந்துறக் கண்டு காரியத்தை விரைவில் முடித்துக்கொண்டு, தேர்மீதேறித்தன் பதிக்கு மீண்டான். மீளும்போது கார்மேகங்கள் அணியணியாக அகல்வானிற் செலக்கண்டு,

கிளைத்துக் கிளைத்தென்னைக் கேட்குந் தொறுங்க
கெண்டையும்,முன் [லுழ்
வளைத்துக் கிடந்த வரிமணற் கூடலும்,
வண்ணமெல்லாம்
விளைத்துக் கிடந்த பசலையு மாய்உள்ளம்
விம்மிவிம்மி
இளைத்துக் கிடந்தவட் கென்சொல்ல மேகங்கள்
முன்செல்வதே

என்று தலைவியின் புலம்புநிலையை நினைந்துநினைந்து இனைந்தினைந்து தன்னூரைச் சேர்ந்தான்.

சேர்ந்த அற்றைப்பிற்பகலே அவன் தலைவிக்குத் தன் வரவை அறிவிக்கும்பொருட்டு அங்கே சென்றான். அவன் தூரத்தே வரும்போதே அவனது தேரின் மணியோசையைத் தலைவி ஓர்ந்து பாங்கிக் குரைப்ப, அவனைக் காண அவளும் முன் சென்றாள். அவளைக் கண்டதும் அவன் தேரினின்றிழிந்து, தனது நீண்ட பிரிவின்கண் இத்தலை நிகழ்ந்த செய்திகளை யெல்லாங் கேட்டறிந்து தலைமகள் ஆற்றியிருந்த தன்மையையும் வினவினான். அவற்கு அவள் நடந்தவற்றை யெல்லாம் நவின்று,

மதிகாட் டியநுதல் வல்லிசிந் தாகுலம்
மாற்றியதுன்
பதிகாட் டியும்,உன் பனிவரை காட்டியும்,
பாய்திரைநீர்
நதிகாட் டியும்,புது நல்விருந் தாகி
நடந்ததிண்தேர்க்
கதிகாட் டியும்,முன் கலந்தசந் தாடவி
காட்டியுமே.

என்று தான் அவளை ஆற்றியிருந்த தன்மையையுந் தெரிவித்தாள். எல்லாவற்றையுங் கேட்டு அவன் மறுநாளே மணம் பேசுவதற்குத் தக்கோரை அனுப்புவதாகச் சொல்லிப் பின்னும், "நான் சென்ற விடமெங்கும் உங்கள் இளமரக்காவும், இழைத்த குன்றும், பரிமளச் சோலையும், பைந்தினைப் புனமும், பார்த்த விடமெல்லாம் பாவையும் நீயுமன்றி வேறொன்றையுங் கண்டிலெனென்று தலைவிக்குச் சொல்" என்று மொழிந்து தன் பதிக்கு மீண்டான். உடனே பாங்கி வீட்டுக்கு வந்து தலைவிக்கு நல்லோகை விளம்பி,

மருள்முற் றியகளி வண்டிமிர் காந்தள்
மலர்ந்ததுகண்
டிருள்முற் றியகுழ லேந்திழை யாய், இளை
யேலிளையேல்;
பொருள்முற் றிவந்து மணந்துனை நாளைநம்
பொன்னகர்வாய்
அருள்முற் றியமனத் தன்பர் அலர்மாலை
மாற்றுவரே.

* (இதன் பொருள்) கனமான பொன்னாற் செய்த குழைகளை யணிந்தவளே; நுகர்ந்து சுவையினிமை கண்டறியாத அமிர்தத்தையொத்த உன் மகளுக்கு இன்னும் மொழிகள் மழலைத்தன்மை தீர்ந்து திருந்தவில்லை; தனங்கள் அடிக்கொண்டு பரந்தெழவில்லை; பட்சியிற்கின் அடியையொத்த, ஒளி பொருந்திய புன்சிரிப்போடு கூடிய பற்கள் முத்தைப்போல மென்மையவும் வெண்மையவுமாய் இருக்கின்றன; வாசனை விரிந்த பூக்கள் செறுகிய கரிய தாழ்ந்த கூந்தலும் நான் பின்னி முடிக்கும்படிக் கடையொத்து வரவில்லை. ஆயினும், முதுக்குறைவால் அவள் நினக்கு நிகராகிவிட்டாள். (இனி அவள் மணத்தைத் தாமதித்தல் தகாது.)

என்று, வாடிய பயிர்க்கு *வள்ளுறை யென்னத் தலைவனது இன்சொற் றுளிமாரி வழங்கி நலனற உணங்கிய நங்கையைத் தளிர்ப்பித்தான்.

தான் சொல்லியபடியே தலைமகனும் மறுநாளே நலமிக்க சான்றோரை அழைத்து, "இன்றே நீங்கள் குன்றக் குறவர் கோமானிடஞ் சென்று, அவர்தங் குலமகளை மணம்பேசி முடித்து, மங்கல நாளையும் தேர்ந்தமைத்துக்கொண்டு வாரும்." என்று அருமணிக் கலன்களையும் பெருநிதிக் குவைகளையும் மணிமுரசுடன் யானை மீதேற்றி அனுப்பினான். இவர்கள் சென்று வந்த காரியத்தைத் தலைவியின் தந்தைக்குரைத்துத் தலைமகனுடைய குலப்பெருமை, செல்வமிகுதி, யௌவனம், வடிவழகு, கல்வி, அறிவு, ஆற்றல்களை எடுத்தோதி, பரிசப் பொருள்களையும் முன்னுய்த்தார்கள். அவனும் மனமுவந்து முகமன்கூறி இவர்களை வரவேற்றுபசரித்துப் பின் தன் மனைவிமைந்தரோடு கலந்தாலோசித்து மகட்கொடை நேர்ந்து, மணநாளையுங் குறித்து விடுத்தான். இவர்கள் மீண்டு வந்து இவற்றையெல்லாம் தலைமகனுக்குரைக்க, உடனே இருதிறத்தாரும் கலியாண காரியங்களைச் செய்யத் தொடங்கி விரைவிற் செய்து முடித்து மணநாளை மகிழ்ச்சியோடு எதிர் பார்த்திருந்தார்கள்.

இவ்வளவே அகப்பொருளின் முதற் பகுதியாகிய 'களவியல்.'

K. இராமரத்நம் ஐயர்.

* வள் உறை—பெரிய மழைத்துளி.

வானசாஸ்திரம்.

(833-வது பக்கத் தொடர்ச்சி)

அஸ்தர உடுக்கள்.

செவ்வாய்க்கும் வியாழனுக்கு மிடையிலிருக்கும் பெருவெளியில் அஸ்தர உடுக்கள் என்று சொல்லப்படும் சிறு கிரகங்கள் இருக்கின்றன. இவ்வெளியில் ஒரு கிரகம் இருக்குமாயின் கிரகங்கள் ஒரு வரிசைக் கிரமமாக ஏற்பட்டிருக்கும். இவ்விதம் இல்லாததினால் ஆதியில் வானசாஸ்திரிகள், இந்த வெளியில் ஒரு கிரகம் கண்ணுக்குத் தெரியாமல் ஒடிக்கொண்டிருக்கக்கூடுமோ வென்று கொண்ட சந்தேகம் நாளடைவில் இச்சிறு கிரகங்களைக்கண்டுபிடிப்பதற்கு ஏதுவாயிருந்தது இப்போது ஏறக்குறைய 600 சிறு கிரகங்கள் இருக்கின்றன வென்றும் இவைகள் செவ்வாய்க்கும் வியாழனுக்கு மிடையில் 3,00,00,000 மைல் அகலமுள்ள வெளியில் சூரியனைச் சுற்றி வருகின்றனவென்றும் தெரிகிறது. இவைகளுள் மிகப் பெரியது 500 மைல் குறுக்கள வுள்ளது. சில இதனைப் பார்க்கிலும் சற்றுக் குறைந்த அளவுள்ளனவா யிருக்கின்றன. எஞ்சியவை மிகச் சிறியவை. இவைகளில் ஒன்றும் வெறுங் கண்ணுக்குத் தோன்றக் கூடியதன்று.

செவ்வாய்க்கும் வியாழனுக்குமிடையிலிருக்கும் பெருவெளியில் ஆதியில் ஒரு கிரகம் ஏற்படவேண்டியது ஏதோ காரணத்தால் ஏற்படாது சிதறிப்போக இச்சிதறிப்போன பாகங்கள் சிறுசிறு கிரகங்களாக உருவம் பெற்றன என்பது வானசாஸ்திரிகள் துணிபு. இச்சிறு கிரகங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்தால் பூமியின் காற்பங்கு அளவுள்ளதா யிருக்குமென்று கணித்திருக்கிறார்கள்.

வியாழன்

கிரகங்களில் எல்லாம் மிகப் பெரியது வியாழன். இது உருவத்தில் மாத்திரமன்று, கனத்திலும் மற்றெல்லாக் கிரகங்களையும் ஒன்று சேர்த்து ஒப்பிட்டபோதிலும் அவைகளில் எல்லாம் மிகப் பெரியது. இதன் குறுக்களவு 87,380 மைல்; அதாவது இதன் மேற்பாகத்தை மத்திய ரேகையில் சுற்றிவர, ஏறக்குறைய 3,00,000 மைலாகும். பூமியின் சுற்றளவு 25,000 மைலே. இதிலிருந்து இக்கிரகத்தின் அளவை ஒருவிதம் யூகித்துக் கொள்ளலாம். இவ்வளவு பிரம்மாண்டமான அண்டம் சூரியனிலிருந்து, 483,300,000 மைல் தூரத்திற் கப்பால் நின்று, பதினோரு வருஷம் முன்னூற்று இருபத்தொரு நாளில் சூரியனைச் சுற்றிவருகிறது.

வியாழனைச் சுற்றி, ஏழு உபக்கிரகங்கள் அல்லது சந்திரர்கள் ஓடுகின்றன. இவைகளில் நாலு தூரதிருஷ்டி ஏற்பட்டவுடன் கலிலியோ என்பவரால் முதன் முதல் கண்டு பிடிக்கப்பட்டன. மற்றவைகளில் ஒன்று 1892-ம் வருஷத்திலும், இன்னொன்று 1904-ம் ஆண்டிலும் மற்றொன்று 1905-ம் ஆண்டிலும் கண்டு பிடிக்கப்பட்டன. இவைகளுள் முந்திய நான்கும் சந்திரனுடைய அளவு அல்லது அதற்குச் சற்றுப்பெரிய அளவு உள்ளவைகள். பிந்திய மூன்றும் மிகச் சிறியன.

இவைகள் வியாழனைச் சுற்றிவருங் காலமும் அதனிலிருந்து இவைகளின் தூரமும் மிகவும் வேறுபடுகின்றன. இவைகளில் ஒன்று 12 மணி நேரத்திலும், கலிலியோ முதன்முதல் கண்ட சந்திரர்கள், 2, 3½, 7, 16½ நாட்களிலும், எஞ்சிய விரண்டும் ஏறக்குறைய 9 மாதத்திலும் சுற்றிவருகின்றன. இவைகள் இவ்விதமாய்ச் சுற்றோட்டத்தில் வேறுபடுகின்ற காரணத்தால் சில சமயங்களில் இவைகள் எல்லாம் ஒருங்கே வியாழனின் நிழலில் மறைந்து விடுகின்றன. ஆனால் இவ்விதம் மறைவது சொற்ப நேரம்தான். அந்தச் சமயங்களில் வியாழனைப் பார்ப்பவர்களுக்கு வியாழன், சந்திரர்கள் இல்லாத ஒரு கிரகம்போலத் தோன்றும். இவைகள் சூரியனிலிருந்து வெகுதூரத்தில் இருப்பதால் இவைகளில் படும் சூரிய வெளிச்சம் மிகக் குறைவாகவே யிருக்கவேண்டும். ஆகவே, இவைகள் எல்லாம் சேர்ந்து கொடுக்கக் கூடிய வெளிச்சம் சந்திரனிலிருந்து நமக்கு எட்டுகிற வெளிச்சத்திலும் மிகவும் குறைந்ததாயிருக்க வேண்டும். மேலே சொல்லப்பட்ட ஏழு சந்திரர்களைத் தவிர வியாழனுக்கு எட்டாவது ஒரு சந்திரனும் இருக்கிறதாகச் சொல்லுகிறார்கள். வியாழனில் இராத்திரி காலங்கள், அங்கு மனிதர் இருப்பார்களானால் அவர்களுக்கு, மிகவும் சிறப்புடைத்தாய்த் தோன்றும். ஏழு எட்டுச் சந்திரர்கள் வெவ்வேறு கலைகளுடன் சில உதயமாயும் சில அஸ்தமித்தும் சில உச்சியிலுமாய் ஒளிவீசுவனவா யிருக்கும். ஆனால் இந்தக் காட்சியைக் காண்பதற்கு மனிதர் அங்கு உளரோ வென்பது தெரியாது. சீவப் பிராணிகளே இல்லை என்று சொல்வதற்கு ஆதாரங்களுள.

வியாழன் மிகப்பெரிய அண்டமா யிருப்பதனால் அதன் ஆகர்ஷணசக்தி பூமியைப் பார்க்கிலும் 2½மடங்கு அதிகமாயிருக்கிறது. ஆகவே அதைச் சுற்றி வாயுப் படலங்கள் வெளிச் செல்லாமல் நிலையாய்க் கட்டப்பட்டு இருக்கவேண்டுமென்று சொல்லலாம். இவ்விதம் வியாழனைச் சுற்றி அடர்ந்த வாயுப் படலம் இருக்கிறதென்பதற்கும், தூரதிருஷ்டியின் மூலமாக நாம் இந்தக் கிரகத்தைப் பார்க்கும்போது நாம் காண்பது வியாழனின் மேற்பாகமல்லாது, அதைச்சுற்றி யிருக்கும் வாயுப் படலத்தின் மேற்பாகமே என்று சொல்வதற்கும் அத்தாக்ஷிகள் பல உள.

இந்தக் கிரகம் பூமியைப்போல் இறுகித் தடித்த மேற்பரப்பு உடையதாய்த் தோற்றவில்லை. இது இன்னும்

காங்கைவீசும் ஒரு அண்டமென்று சொல்லலாம். சுய ஒளி உள்ளதோ வென்ற சந்தேகமும் ஒரு காலத்திலிருந்தது. ஆனால் அனேக நியாயங்களைக் கொண்டு சுய ஒளி இதற்கில்லை யென்று வானசாஸ்திரிகள் மறுத்திருக்கிறார்கள். அது நீரைப்பார்க்கிலும் 1½ பங்கு தடித்தது என்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஆனால் அது திராவகமாய் இருக்கிறதென்று எண்ண முடியாது. அதன் நிலை இதுதான் என்று நிச்சயமாய்க் கூறுவதற்கு இயலவில்லை.

வியாழன் ஒன்பது மணி 54 நிமிஷத்தில் சுழன்று வருகிறது. ஆனால் அதன் சுழற்சி எல்லாப் பாகங்களிலும் சமமாய் இல்லை. சில பாகங்கள், அதாவது ஒரு பாகம் 9 மணி 50 நிமிஷத்திலும் மற்றைய பாகங்கள் 9 மணி 57 நிமிஷங்களிலும் சுழல்கின்றனவென்று கணக்கிட்டிருக்கிறார்கள். சூரியனும் இவ்விதமாக வெவ்வேறு பாகங்கள் வெவ்வேறு வேகத்தோடு சுழல்கின்றது என்பதை முன் சொல்லியிருக்கிறோம்.

சனி.

மற்றக் கிரகங்கள் எல்லாவற்றையும் பார்க்கிலும் சனி தூரதிருஷ்டியின் மூலமாய்ப் பார்க்கும்பொழுது மிகவும் சிறப்புள்ளதாகத் தோன்றுகிறது. இந்தக் கிரகம் உருண்டை வடிவமுள்ளதாய் இருப்பதுமல்லாமல் அதன் மத்திய ரேகைக்குமேல் அதைச் சுற்றி மூன்று தட்டையான வட்டங்கள் ஒன்றின்மே லொன்றாய் அதைச் சுற்றிச் சுழன்று கொண்டிருக்கின்றன. இவைகளின் கனம் 56 மைல்தான். ஆனால் இவைகளின் மூன்றின் அகலம் 1,72,300 மைல். அதாவது இந்தக் கிரகத்தின் குறுக்களவின் இரண்டு மடங்கு. இவைகள் நீரின் தன்மையானவைகளாய், அல்லது இறுகித் தடித்த கனமுள்ளவைகளா யிருக்கவேண்டுமென்று, வானசாஸ்திரிகள் எண்ணியிருந்தார்கள். ஆனால் இப்பொழுதோ இவ்வட்டங்கள் தனித்தனி சனியைச்சுற்றிவரும் மிகச் சிறிய பிண்டங்கள் ஒன்றாய் நெருங்கி யிருப்பதனால் உண்டாகும் தோற்றமென்பதே எல்லாராலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதிலிருந்து ஒரு உபக்கிரகம் ஏற்படவேண்டியது. ஏற்படாமல் இவ்விதமாக இந்தக் கிரகத்தை வட்டம் போல் நின்று சுற்றி வருகின்றது என்று யூகிக்கிறார்கள்.

சனியின் குறுக்களவு 76,470 மைல். இது பத்து மணி நேரத்தில் சுழன்று வருகின்றது. அதன் சுற்றோட்ட காலம் 29 வருஷம் 167 நாள். இதுவும் வியாழனைப் போல வெவ்வேறு பாகங்கள் வெவ்வேறு வேகத்துடன் சுழல்கின்றது. இது வியாழனைப் பார்க்கிலும் நுண்மையுள்ளதாயிருப்பதால் இது இறுகாத நிலையில் இருக்க வேண்டுமென்பதாகச் சொல்லுகிறார்கள்.

இந்தக் கிரகத்தைச் சுற்றிப் பத்து சந்திரர்கள் ஓடுகின்றன. இவைகளில் ஒன்று நம் சந்திரனுடைய அளவும் இன்னொன்று சந்திரனிலும் ஒன்றரை மடங்கு பெரியதுமாயிருக்கிறது. மற்றவைகள் மிகச் சிறிய உருவங்கள். மேற்சொன்ன இரண்டு பெரிய உபக்கிரகங்களும் முறையே முந்தியது 750,000 மைலுக்கப்பாலும் பிந்தியது 42,50,000 மைலுக் கப்பாலும் நின்று பதினாறுநாளிலும் இரண்டரை மாதத்திலும் சனியைச் சுற்றி வருகின்றன. சனியைச் சுற்றிவரும் உபக்கிரகங்களில் ஒன்று, (மற்றக் கிரகங்களும் அவைகளைச் சேர்ந்த சந்திரர்கள் எல்லாம் ஒரே முகமாய்ச் சுற்றிவர) எதிர்முகமாய்ச் சுற்றிவருகிறது. இவ்விதம் எதிர்முகமாய்ச் சுற்றிவரும் அண்டம் சூரிய கிரகக் கூட்டத்தில் இதைத்தவிர வேறு இல்லை.

சூரியனிலிருந்து சனி வெகுதூரத்துக் கப்பாலிருப்பதனால், அதாவது, 886,0,00,000 மைலுக்கப்பாலிருப்பதனால், சூரியன் சனியிலிருந்து பார்க்கும்போது ஒரு பெரிய நக்ஷத்திரமாகத் தோற்றுமே அல்லாது வட்டவடிவமாகத் தோற்றாது. அதுமாத்திர மன்று. சூரியனைச் சுற்றி வரும் கிரகங்களில் வியாழனைத் தவிர மற்றக் கிரகங்கள் ஒன்றும் தோற்றாமல் சூரியனுடைய ஒளியில் மறைந்து போகும். சூரியனிலிருந்து சனிக்கு எட்டும் ஒளியும் காங்கையும் பூமிக்கு வருவதில் தொண்ணூறில் ஒரு பாகந்தான் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இவ்விதம் சூரிய ஒளி மிகக் குறைந்து வருவதனால் சனியைச் சுற்றி வரும் சந்திரர்களின் ஒளி மிகவும் குறைந்ததாகவே யிருக்கவேண்டும். அவைகள் ஒளிவீசுமோ வென்பதே சந்தேகப்படத் தக்கது.

காந்திமதி என்னும்

காந்தாரநாட்டுக் கட்டழகி.

(836-வது பக்கத் தொடர்ச்சி)

35. படகின் செலவு.

குண்டிலினியாற்றின் கதிக்கு எதிர்த்தே உழுததாயினும், சித்ராங்கனோடு மாதர்நால்வரைச்சுமந்து சென்ற அவ்வழகிய படகு, உந்துவோர் ஆர்வத்தைத் தானும் உட்கொண்டதுபோல் இரத்தினபுரி நோக்கி விரைந்தே தவழ்ந்தது. இன்பத்திற்கு இம்மையிலன்றி மறுமையிலும் எல்லை இதுவோவெனத் தளங்கும் உள்ளத்தராய் இளவரசனும் அவனிரு தேவிமாரும், பரிதியின் இளங்கதிர் தீண்டலால் சிவந்தலரும் பதுமத்தின் செவ்விவாய்ந்த முகத்தோடும் முன்நின்ற தூரத்தைத் தம் நெடுங்கண் பார்வையால் பின்னகல அளந்து சென்றார். காதலன்தான் தனக்கு யாவனெனத் தன் மனத்தே தோராது அயரும் நிலையளாய காந்திமதியும் பிறர் இன்புறக்கண்டு தான் இன்புறும் பெற்றியளாதலால், பூமகளும் நாமகளுமன்ன மங்கையர் இருவருக்கும் தன்னிருதோளுமளித்துத் தனிப்பேரழகுடன் பொலிந்த தோன்றலைக் காணுந்தோறும் அலளுள்ளத் துறிய உவகையாம் நறவுண்டு களிமயக்குற்று ளென்னத் தன் நினைவும் இடையிடையே மறந்து போவாள். கயற்கண்ணியோ களிப்பின் மிகுதியால் தன்னுணர்வை மறந்ததோடமையாமல் மெய்யையும் அயர்ந்தாள். காலஞ்சென்ற நம்கபடவைத்தியன், மாநுட இயற்கையைச் சங்கையறக் கற்றவன் தான் என்னும் இறுமாப்பால் இளவரசன் நயந்தமைத்த வாசகம்போல் அவளை அகற்றவென்று வரைந்துவிட்ட காதல்கூர் நிருபத்தைப் பெற்றிருந்த மந்தாகினி, மகிழ்வோடும் தன் கொழுநன் வரவை மாளிகைச் சாளரத்தூடே நோக்கியிருந்த அந்நாள், அவன் எய்தியவுடன், பெருங்காலம் தாழ்ந்து வந்த காதலனை விளையாட்டாய்ச் சிறிதளவு கலக்கங்காணச் செய்தவொரு சூழ்ச்சியாற்றான் இத்துணை நலங்களும் இவட்கு வந்துற்றன. தாமோதரன் மாளுட மனதின் தன்மையை

முன் வைத்துக் கணித்த குறி தவறவில்லை. அளவே பிழைத்தது. அக்கடிதத்தைக் கண்டவுடன் மந்தாகினி எத்தூரம் விலகுவாளென்று அவன் குனித்தானோ அத்தூரம் அவன் அகன்றிலன். மாளிகையையே முற்றத் துறந்து அவன் தன் தந்தைபால் நண்ணுவாள் என்று எண்ணினான் அவன். இவளோ, மனையின் அறையே மாறிப் போயினாள். இவ்வாறு மாறாது அவள் இளவரசன் வந்தபோது எதிர்கொண்டு சென்றிருப்பாளாயின் எக்கதி வாய்த்திருக்குமோ. காந்திமதியின்பால் சித்ராங்கன் ஆடிய நாடகத்தில் பரிவினோடும் அவள் பகர்ந்த வன்மை மிகுந்தவேனும் நன்மைதரு மொழிகளால் அவன் தெருண்டான். நரபாலன் இழைத்த கொடுமையால் சித்ராங்கன் உண்மையாய் நண்ணுவோர் உறவின் உறுதிக் கவாவினான். பொதியறைப்பட்டுத் தன் உயிரின் அவதியை அனந்திருந்தபோது அவன் மனத்துள மாசெலாம் பொசுங்கிப் போயின. பின் மாதவி வேடத்தோடு மணிவாளன் மாமகள் தன் பொருட்டுச் சாதித்த காதற் சாகசங்களால் அவனுள்ளம் பாகெனத் தேனென இளகி இருந்தது. இன்னபல வகைகளில் பண்பட்ட செவ்வியனாய் இளவரசன் மந்தாகினியை அவள் தன் தெய்வத்தின்முன் தவங்கிடக்கும் நிலையில் கண்ணுற்றதால் காதல்கொள அவன் கருத்துத் துள்ளியதென்றெண்ணல் வேண்டும். மற்று இவையெலாம் நிகழ்வதன் முன் மாளிகையுட் புகுந்தவுடன் மந்தாகினி எதிர் நின்றிருப்பாளேல் பலநாள் அவள்பால் பயின்றுள வெறுப்பே தலைகொள்ள முன்னிலும் பதின்மடங்கு அவளை இகழ்ந்து அவள் உயிரும் தன் நாவும் பிளக்குமாறு நிந்தனைகள் பேசியே தீர்த்திருப்பான்.....ஆம்... இவ்வளவும் வகுத்திங்கு உரைப்பதற்கு ஆதாரம் நமது ஊகமேதானோ வேறுதா னுண்டோ எனின், ஐயமற்ற ஆதாரமுளது. ஏனெனின், சித்ராங்கனே இவைகளைப் படகு புறப்பட்டது முதல் நெடுந்தூரம் அருங்கலமனையவம் மாதர்க்குச் செப்பி வந்தான். அவ்வுரைகளுக்கிடையே சித்ராங்கன் காந்திமதியைக் கருதியே தான் அம்மாளிகைக்கு வந்த நோக்கமும், அதற்கு உதவியாய் அப்பொய்க்காத லொழுகு முடங்கலை மந்தாகினிக்கு விடுத்த பரிசுங் கூறி, "எனதினியாய், மந்தாகினி, என்பால் நீ இத்துணை ஆதரம் வைத்திருந்தும் நான் வந்தபோது எதிர்வந் தழைக்காமல் மறைந்து சென்றது என்?" என வினவிய காலையில், அவள் செய்ததைத் தன் செயலாகச் சொல்வதற்கு இறைநாணி, "வேந்தே, நெடிதுநாள் என்னைத் தணந்திருந்த நீ அன்றுவந்தவுடன் காணாமல் சிலநேரம் கலங்கக்காணவேண்டுமென்று இக் கயற்கண்ணி எனக்குக் கற்பித்தாள். அதற்கு இணங்குவதோ இல்லையோவென்று யான் தோராமுன் நின்னுருவம் மாளிகைக்குள் நண்ணிவிட்டது. வெருவிச் சிறிது நின்றேனை இவள் வலிந்திழுத்துச் சென்றனள்" எனத் தன் தோழியைக் கைகாட்டி விட்டாள். இனிதே முடிந்தேறிய இந்நிகழ்ச்சிகளுக்கு அடிப்படியாய் அமைந்த அச்சூழ்ச்சி வாய்மையில் தன்னின்று பிறக்க வில்லையாயினும் கயற்கண்ணி அதன் பொறுப்பை உவகையுடன் ஏற்றிருக்கத் தாழ்ந்திலள். நாணத்தால் இதனை மந்தாகினி தன் விளையன்றென மறுக்கின்றா ளென்பது கயற்கண்ணி முதலில் அறியாததன்று. ஆயினும், படகு செல்லச் செல்ல, சித்ராங்கன் அதனால் விளைந்த நலங்களைப் பெருக்கப் பெருக்க, தன்னேரில்லா பாக்கியம் பெற்றுத் தன் தலைவி பொலிவதைக் காணக் காணக் கயற்கண்ணி தனக்குற்ற களிப்பினிற் கிடையே, முன் நிகழ்ச்சியையும் முதல் நினைவையும் மறந்து, "என் தலைவி மந்தாகினி பொய்யறியாப் பேதை. உண்மை அவளுரைத்த வண்ணந்தான் இருத்தல் வேண்டும். நானே இவ்விளையாட்டைத் துவக்கித் தந்துளேன். மற்று, அவள் செய்தாளென்று நான் நினைத்திருந்தது மாறிய என்மதியின் சோர்வினால் நேர்ந்திருந்தது போலும்" என்று தனக்குற்ற பெருமையின் மிகுதியை உன்னி ஏமாந்திருந்தாள்.

படகினை ஓட்டிய ஆள்கள் உற்றிருந்த வியப்பிற்கும் மகழ்விற்கும் ஆழங்காண்டலரிது. முன்னிரவு மாய்ந்து போனான் என்று அவர் எண்ணியிருந்த நம்பி இன்று தமது அம்பியில் அரசியர் இருவரோடு வீற்றிருக்கக் கண்டாரென்றால் மண்ணிலே தண்ணீரில் ஒரு படகைச் செலுத்துகின்ற நினைவு அவர்களுக்கு எஞ்சுவ தெங்ஙனம். விண்ணிலே அவர் தமதருமைத் தலைவனைப் பொன்னாடு சேர்ப்பித்து இந்திரனே அவன் ஆகக் காண்பதற் கிருப்பார்போல் தோன்றினர். அவ்வாறு செல்லுங்கால் நெறியில் கடப்பதற்குள்ள ஆகாய கங்கையில் ஓட்டிய படகே யன்றிக் குண்டிலினியை எதிர்த்தோடும் தோணியோ அவர்களுக்கு அவ்வேளை அதுவன்று. அல்லாமலும், இவர் உய்க்கின்ற வேகத்தை நோக்குங்கால் சித்ராங்கனைக் கொண்டுபோய் விட்டுவிட்டுக் கடிதின் மீண்டு வந்து நரபாலன் உயிரையும் அவனுக்கு அருகே தொங்கிய வைத்தியப் பாதகன் உயிரையும் நெருப்பாற்றில், கட்டி இழுத்துப் போய் நிரயத்தில் தள்ளிவர நினைந்தனரோ என்னும்படி இருந்தது.

இன்னபடி, அழகெனுந் தன்மையே இன்பமாம் அங்கமேற்று அவதரித்தாலென்னத் தோன்றும் தெரிவையரும் பெருமகனும் பலவாறு உரையாடிச் சித்திர மோகன மாளிகையின்கண் நிகழ்வுற்ற செய்திகளின் தொடர்ச்சியில் அவரவர் அறியாத பாகத்தை அறிந்தோர்க் கேட்டுணர்ந்து வியந்து ஏகினர்.

T. N. சேஷாசலம்.

வெண்பாப் புலி என்ற புகழோடு விளங்கியவரும்
ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையவர்கள் மாணாக்கரும் ஆகிய
ஸ்ரீ. தி. சு. வேலுசாமிப் பிள்ளை அவர்கள் இயற்றிய
கந்தபுராண வெண்பா
ஆறு காண்டங்களும் 5665 செய்யுள்களும் அடங்கியது.
இதுகாறும் வெளிவந்திராத இந்நூல் ஓதற்கினிய நேரிசை வெண்பாக்களால் அமைந்தது. அறுமுகக் கடவுளின் அருள்பெருகப் பாடிய இவ்வெண்பாக்கள் கற்றோர் இதயத்தைக் களிக்கச் செய்யும் தன்மையன.
விலை ரூ. **4-8-0** வி. பி. சார்ஜ் வேறு.
மானேஜர், கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, சென்னைப்பட்டினம்.

64 பக்கம் **ஆனந்த விகடன்**
இதுகாறும 48 பக்கம் விஷயங்களுடன் வெளிவந்தஆனந்த விகடன் இந்த ஆவணி மாதம் முதல் 64 பக்கங்களுடனும் ஏராளமான படங்களுடனும் வெளிவரும் என்பதைச் சந்தா நேயர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம். சிறந்த எழுத்தாளரிடமிருந்து கட்டுரைகளைக்கொண்டது. மாதப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் சிறந்தது "ஆநந்த விகடனே". "ஆனந்த விகட"னிலுள்ள ஒரு பக்கத்திற்கு ஒரு நுபாய் கொடுக்கலாமென்று ஒரு சந்தா நேயர் நமக்கு எழுதியுள்ளார். நீங்கள் ஒரு வருஷத்திற்கு ஒரு நுபாய் கொடுக்கக்கூடாதா?
வருட சந்தா :— இந்தியா, பர்மா, ஸிலோனுக்கு
தபால் கூலியுள்ப_ ரூ. 1—0—0 வெளி நாடுகளுக்கு முன் பணம் ரூ. 1—4—0
ஆனந்த விகடன் ஆபீஸ், 244, தங்கசாலை வீதி, மதராஸ்.
தந்தி விலாசம்:—"விகடன்" மாதிரி காபி இனும். டெலிபோன் நெ. 3311.

முருகன், ஓர் உழவன்.
ஸ்ரீமான், K. S. வேங்கடரமணி M.A., B. L., ஆங்கிலத்தில் இயற்றியதும், இந்த நாட்டில் மாத்திரமல்லாமல் ஐரோப்பிய தேசங்களிலும் பெரிது கொண்டாடப் பெறுகின்றதுமான "Murugan, The Tiller" என்னும்
நாவல் நூலிற்கு
கிருஷ்ண குமாரி
என்பவரால் எழுதப்பெற்ற தமிழ் மொழிபெயர்ப்பு
கதையின் அழகும் வாழ்க்கையின் தத்துவங்களும், மாநட இயற்கையும் பலவேறு பாத்திரங்களின் அமைப்பும் வாய்ந்த இப்புத்தகம் எளியநடையில் அமைந்திருக்கின்றது. (400 பக்கங்கள் கொண்டது)
விலை ரூ. **1-8-0** (வி. பி. சார்ஜ் வேறு). மானேஜர்,
கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

தமிழ் நாடெங்கணும் புகழ்வாய்ந்த
எங்கள் நிகரிலாத
"ஆநந்த குணபோதினி"
ஆடி மாதமுதல் ஆங்கில மாத ஸஞ்சிகைகளை யொப்ப நவீன நாகரீக உருவுடன்
அமிர்த குணபோதினி
என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக 3-வது ஆண்டு]வெளிவருகின்றது.[3-வது ஆண்டு பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S.G. இராமாநுஜலு நாயுடு அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.
அநுபவ ஞானபோதனையில் இதுபோன்ற முதன்மையான மாத ஸஞ்சிகை வேறில்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகை யொன்றில் தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜநவிநோதினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவ ஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆநந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தாதாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோகரமாயிருப்பது எது? எங்கள் "அமிர்தகுணபோதினி"யே. 56-பக்கங்களுடனும் ஒரேரூபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப் பத்திரிகை தமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்குச் சமமான தமிழ் மாத பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தாரூபாய் ஒன்றே. வெளி நாடு ரூ. 1 4 0 மாதிரி காப்பி இனும்.
தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்த குணபோதினி ஆபீஸ்,
302, தங்கசாலை வீதி, சென்னை.

வியாஸங்கள்.
வியாஸங்கள்! வியாஸங்கள்!!
வியாஸங்கள் மிக எளிதில் அறிந்து அதன்படி நடந்து நன்மையடையக் கூடியவிதமாக எழுதப்பட்டுள்ளன.
கீழ்கண்ட வியாஸங்கள் ஒவ்வொரு தமிழரும் வாங்கி வாசித்துப் பயனடையக் கூடியனவாகும். நமது முன்னோர்களுடைய உபதேசங்கள் பலவற்றை நம்மில் பலர் அறியாமலிருக்கிறார்கள். காரணம், அவையாவும் செய்யுளாக இருப்பதினால். இந்த வியாஸங்கள் அச்செய்யுட்களையே பெரும்பாலும் தழுவி வசனமாக எழுதப்பட்டிருக்கின்றன.

	ரூ.	அ.		ரூ.	அ.
அன்பு	0	1	பொதுமதம்	0	2
பலவகை மனிதர்	0	1	ஆறுதாரம்	0	2
தவம்	0	1	சந்தேகம்	0	2
பொறுமை	0	1	கற்பு	0	3
இருவினை	0	2	அஸ்தபூஷணம்	0	4
இல்லறம்	0	2	பதினாறுபேறு	0	4
ஆலயவழிபாடு	0	2	என் தந்தையார்	0	6

மேல்கண்ட பதினான்கு புத்தகங்களையும் ஒரே தடவையில் வாங்குபவர்களுக்கு ரூபாய் இரண்டேக்குக் கொடுக்கப்படும்.
தபால் சார்ஜ் இனும்.
இன்றே எழுதுங்கள்!
நவீனகதா புத்தகசாலை,
மங்கமாரி வீதி, இரங்கூன்.

கம்பராமாயணம்
பாலகாண்டம்

T.N. சேஷாசல ஐயர், B.A.,B.L., பதிப்பு.

சிற்றடக்கமாய் நல்ல கட்டிடத்தில் புதிய முறையில் பொருள்விளக்கி இப்பதிப்புப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்குப் பதவுரை எழுதிவிட்டால் படிப்பவர் தம் முயற்சியால் பொருள்தேடும் பழக்கம் பெறாது போய்விடுவர். ஆதலால் இப்பதிப்பாசிரியர் பதம் பிரித்துத் தொடர்விரித்து அன்வயப் படுத்தி அவாய் நிலைகளை வருவித்து, அரும் பதங்களுக்கு அர்த்தம்கூறி விசேஷக் குறிப்புக் களையுஞ் சேர்த்துக் கூடியவரையில் கம்ப ருடைய வார்த்தைகளாலேயே அவர் செய்யு ளின் கருத்தை விளக்குகின்றார்.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்கு இவ் வாசிரியர் காட்டும் பொருள் புதியன. இவர் செப்பும் உரையாவும் கவியின் இருதயத்தைத் தழுவி எழுதியன.

விலை ரூ. 3 0 0
(வி. பி. சார்ஜ் வேறு)

மானேஜர்,
"கலா நிலயம்"
11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம்,
சென்னை.

ஏமாங்கதத் திளவரசன்

T. N. சேஷாசலம், B.A.B.L., இயற்றியது.

இலக்கிய நலங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதல் காதை. அன்பினது வன்மை யும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்துசெய்யும் துன்மதிச் சூழ்ச்சியும் கலந்து இக்கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஓர் தனிச்சுவை உளதென்பதை இந்நூலினுள் காணலாம். ஆங்கிலக் கதைவல்ல ஆசிரியர்களின் நூலி னுள் தோன்றும் சம்பாஷணை நயத்தைத் தமி ழில் தன்னுள் ஏற்ற நூல் இதுபோன் றிருப் பன வெகு சில.

விலை ரூ. 1 0 0
(வி. பி. சார்ஜ் வேறு.)

மானேஜர்,
"கலா நிலயம்"
11, வெள்ளாளர் தெரு,
புரசைவாக்கம்,
சென்னை.

KAMBAN'S KOSALA
or
A Poet's Plea for Culture
by T. N. Seshachalam B.A., B.L., In English

A Succinct exposition of the Poetic Art and the Political Philosophy of Kambar as can be gleaned out of the First Four Padalams of Balakandam.

With a Foreword by Dr. James H. COUSINS

This book is an excellant commentry on the great truth that the art of literature is something of an abstraction, an idealisation that purposely leaves the realities aside. The scope and the purpose of the book will be clear from the author's preface which is quoted below :—

THIS little book is ambitious. Taken by itself it hopes to interpret an ancient seer-poet's judgment on the conflict that is now rampant on all sides between conservative harangues and socialistic utopias. But its main purpose is to introduce to the world of thought and letters, the great Kamba Ramayanam, an extraordinary work of art and book on life, but which would without elucidation be perplexing to all the western methods of analysis and reasoning.

About Kamban, as with many other great personalities, much is not known beyond his works. He lived nearly ten centuries ago and was accepted as the greatest among the poets of his time. The Ramayana which he composed has not been surpassed by anything in the epic literature of the Tamil land. The magnificient classics of the earlier academicians were all his heritage, and his imagination and native genius were considerably assisted by his scholarship. The hoary literatures and philosophy of India alone could have cradled such a genuis, a genius higbly poetical, pre-eminently moral, transcendental by the inspired revelations of its seer's ecstasy and best formed to clarify the elemental Truths of life here and hereafter.

Kamban professes Valmiki's Sanskrit epic of the same name as the original for his Ramayanam. But this is almost akin to Shakespeare's indebtedness to Boccacio or Plutarch. Kamban's Ramayanam is the embodiment of a mind, the most creative that ever engaged in the exact portrayal of the details of actual existence, in the dazzling speculations of life among the gods and in the profound complications of passions, human and superhuman. The eternal story of Rama runs in crystal stream of fortytwo thousand three hundred and forty eight lines of sublime grandeur glorifying the Creator and reflecting His creation,

With the Kural and the Gita, the Ramayanam is the most ennobling book that has ever been written. Like many other good things, however, it is not generally understood and made sufficient part of one's being The realization of the conception of life, individual and social, that gathers and takes shape in one's mind as this wonderful epic is read and re-read ought to recast the destiny of mankind. Price Re. 1-4-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*" 11, Vellala St., Purasawalkum, Madras.

வர்த்தமானம்.

இவ்வருஷம் தென்னிந்திய சுதேச அரசாங்கக் குடி களின் மகாநாடு திருவனந்தபுரத்தில் நவம்பர் மாதம் நடக்கவிருக்கிறது.

***

பாரிஸ் நகரத்தில் ஆறடுக்குக் கட்டிடம் ஒன்று கட்டிக் கொண்டிருக்கையில் இடிந்து விழுந்து இருபது வேலை யாட்கள் மாண்டார்கள்.

***

இந்திய அரசாங்க புதிய அங்கத்தினராகிய சர் வில்லி யம் கான்டர் என்பவர் இந்தியாவுக்கு வருவதற்குச் சென்றவாரம் லண்டனில் கப்பற் பிரயாணமானார்.

***

மான்செஸ்டர் வியாபாரச் சங்கத்தின் தலைவரான சர். எட்வேட் ரோட்ஸ் என்பவர் இந்தியாவுக்கு வியாபார விஷயமாக வருகிறார்.

***

இங்கிலாந்தில் சென்ற வாரம் கடும்புயல் ஒன்று அடித்து எங்கும் சேதம் உண்டாயிருக்கிறது. கப்பல் போக்குவரவு நின்றிருக்கின்றது.

***

பார்சிய அரசாங்கத்தார் நூறு மாணவர்களை மேனாட் டுச் சாஸ்திரங்களைக் கற்பதற்காக ஐரோப்பாவிற்கு அனுப்ப இருக்கிறார்கள். இதற்கு ஐந்து இலக்ஷம் ரூபா செலவாகுமாம்.

***

இந்தியாவில் நாசிக்கல் அச்சடித்த புது நூறு ரூபா நோட்டுகள் இனிமேல் வெளிவரும். அவைகள் பழைய நோட்டுகள் மாதிரியாய் இருந்தபோதிலும் நீளம் சற்று வித்தியாசமுள்ளவையா யிருக்கின்றன.

***

லார்ட் பர்க்கென்ஹெட்டுக்குப் பதிலாக இந்திய மந்தி ரியாய் லாட் பீல் என்பவர் நியமிக்கப்பட் டிருக்கிறார். இந்த வாரத்திலிருந்து லாட் பீல் தன் உத்தியோகத்தை ஆரம்பிப்பார் என்று தெரிகிறது

***

துருக்கியில் அத்தேசத்தில் கல்வியில்லாமலிருக்கும் சனங்கள் எல்லாரையும் எழுதவும் வாசிக்கவும் கற்பித்தற் காக 12000 உபாத்தியாயர்களை ஏற்படுத்திக் கல்வி புகட்டவேண்டுமென்று ஒரு பிரயத்தனம் துருக்கி அர சாங்கத்தார் செய்ய எண்ணியிருக்கிறார்கள்.

***

இவ்வருஷம் "நோபில் பிரைஸ்" டாக்டர் வி. வி. இராமன் அவர்களுக்கு அடிக்கப்படலாம் என்று எதிர் பார்க்கின்றார்கள். இவர் பூதத்துவ ஆராய்ச்சியில் உலகப் பிரசித்திபெற்றுப் புதியவும் அருமை வாய்ந்தவு மான விஷயங்கள் சில கண்டு தெரிவித்திருக்கின்றார்.

***

பூனாவில் நடக்கும் சைமன் கமிஷன் விசாரணையில் ஆங்கிலேய உத்தியோகஸ்தர் ஒருவர் வாக்குமூலத்தில் போலீஸ் பகுதியை மந்திரிகள் கையில் கொடுப்பது சரியல்லவென்றும் அவ்விதம் கொடுத்தால் அதனால் கேடுகள் உண்டாகும் என்றும் சொன்னார். ஆங்கிலேய உத்தியோகஸ்தரே இந்தப் பகுதியைச் சரிவர நடத்தத் தகுந்தவர்கள் என்பது அவரது அபிப்பிராயம். இவ்வி தமே காட்டுப் பரிபலானமும் முன்னேற்றத்துக்கு வந் தது ஆங்கில உத்தியோகஸ்தர்களால்தான் என்பது இன்னொருவரது அபிப்பிராயம்.

நியூயார்க் நகரத்தில் ஒரு தனவந்தர் ஒவ்வொரு தேசத்திலு மிருந்து ஒவ்வொருவர் ஹார்வாட் சர்வ கலா சாலையில், அரசாங்கங்களைக் கட்டுப்படுத்தும் சட்டங் களைக் கற்பதற்காக 500000 டாலரை ஒரு நிதியாக வைத்திருக்கிறார். அறுபது மாணவர்களை இதற்காகத் தெரிந்தெடுப்பார்கள்.

***

இங்கிலாந்தில் கார்டிவ் என்னும் இடத்தில் ஒரு பிர சங்கத்தில் சர் வில்லியம் அர்பதனற்வேலன் என்பவர் இந்திய சமயம் புலாலுண்ணாமையைக் கட்டாயப் படுத் துவது மிகவும் சிறந்ததென்றும் இதன் காரணமாக இந்தியர் வெள்ளையரைப் பார்க்கிலும் அதிகமாகக் கஷ் டம் சகிக்கக்கூடிய சாதியாரென்றும் சொன்னார்.

***

கிழக்குக் கரையோரங்களில் பெருமழை பெய்து வெள்ளப் பெருக்கினால் கிழக்கு இந்தியப் புகை இரதப் பாதையிலும் சென்னைத் தென் மராட்டா இருப்புப் பாதையிலும் பல விடங்களில் உடைப்பு ஏற்பட்டிருக் கின்றது. வாராவதிகளும் சில விழுந்து விட்டன. துளி என்ற இடத்திற்கருகே, பாதையைச் சோதிப்பதற்காகச் சென்ற ஒரு எஞ்சினும் வண்டியும் உள்ளிருந்த டிஸ்ட் ரிக்ட் டிராபிக் சூபரின்டெண்டெண்ட், உதவி டிராபிக் சூபரின்டெண்டெண்ட் இவர்களுடன் ஒரு வாராவதி யில் வெள்ளத்தில் விழுந்து விட்டது. எஞ்சினியர் தவிர மற்றவர்கள் என்ன ஆனார்களோ தெரியவில்லை. எஞ்சினி யரும் எஞ்சினில் வேலை செய்த இருவரும் தப்பினர்.

***

சென்னைச் ஸிட்டி சிவில் கோர்ட் சிரஸ்ததாராராயிரு ந்து சென்றவாரம் இளைப்பாறிய மஹாஸ்ரீ ராவ்சாகிப் T.R. ஸ்ரீநிவாஸஐயர் அவர்களுக்கு உபசாரமாகவும் அவர் மேலுள்ள நல்லபிமானத்தைத் தெரிவிக்கும் பொருட் டும் தென்னிந்திய அத்திலெடிக் அஸோசியேஷனில் சென்னை அட்வக்கேட்கள் அநேகர் கூடினார்கள். அச் சமயத்தில் திவான் பகதூர் T. ரங்காச்சாரி அவர்கள் ஸ்ரீநிவாச ஐயருடைய விசேஷ குணங்களைப்பற்றி எடுத் துரைத்து, அவர் இனிமேல் தேச முன்னேற்றத்துக்கு உதவக்கூடிய காரியங்களில் தன் நாட்களை கழிக்க வேண்டியது என்று சொன்னார். ஐயரவர்களும் தனக்கு இவ்விதம் சன்மானம் செய்ததற்காக வந்தோரெல்லாருக் கும் தன் நன்றியறிவைப்பாராட்டி ரங்காச்சாரியாரவர்கள் சொன்னவற்றிற்கும் சிறப்பாகச் சிலவுரைகள் பகர்ந்தார்.

***

காபூல் நகரத்தில் நவம்பர் மாதம் நடக்கவிருக்கும் ஆசியா தேசங்களின் ஒற்றுமைக் காங்கிரசில் பின்வரும் நாலு தீர்மானங்களை ஆமோதிக்க விருக்கிறார்கள். இவைகளை இந்திய காங்கிரசிலும் கொண்டுவரவேண்டு மென்றும் சிலருக்கு எண்ணமிருக்கிறதாகத் தெரி கிறது. அவையாவன :—

1. உலக மடங்கலும் சாதி வேறுபாட்டை அறவே யொழித்தல் வேண்டும்.

2. ஆசியாவில் உள்ள தேசமெங்கும் ஆசியா வர்த்த மானப் பத்திரிகைகளையும் வர்த்தமானங்களைப் பரவச் செய்வதற்கேற்ற ஸ்தாபனங்களையும் ஏற்படுத்த வேண் டும்.

3. தேசங்களுக்கிடையே மாணவர்களையும் பண்டிதர் களையும் மாற்றச் செய்யவேண்டும்.

4. ஆசிய தேசங்களுக்கிடையில் கலைச் சம்பந்தம் ஏற் படுத்தவேண்டும்.

189026

THOUGHTS FOR STATESMEN

from

MONTESQUIEU AND TOCQUEVILLE

IN ENGLISH

by

T. N. SESHACHALAM B.A., B.L.

WITH A FOREWORD

by

Sriman S. Sreenivasa Aiyangar

The purpose and Scope of the book is well set out in the opening paragraph of the author's preface which is quoted below:—

The course of history may vary in some details with different countries and at different periods, but human nature, the fundamental spring of all actions remains constant and shows a remarkable uniformity throughout. A proper understanding of that phase of human nature which specially manifests itself in the carrying on of a corporate existence should be an invaluable equipment to those who are engaged in the making or the maintaining of a nation. Philosophical historians have attempted to find the common principles and emotions which, operating upon men of every climate and degree of civilization, produce certain results. With their keen powers of observation and insight they gather a comprehensive view of our society, institutions and destiny. An attempt is made to collect in this book some of the very important observations made and far-reaching results arrived at by two notable French writers of eminence and perhaps not very well known to an ordinary English reader.

It is needless to add that the selection of these passages has been made with an eye to their applicability to the present conditions in India.

Price Re. 1-8-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*"

11, Vellala Street, Purasawalkum, Madras.

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM

OF

CEYLON CIVIL SERVICE

WITH AN APPRECIATIVE

FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5-8-0. (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

11, VELLALA STREET,

Purasawalkam, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)